www.Padasalai.Net www.CBSEtips.in




Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

சுராவின்

# தமிழ் உரைநூல்

## 8ஆம் வகுப்பு

**திருத்தியமைக்கப்பட்ட புதிய பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.**

### சிறப்பம்சங்கள்

- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளிலும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு வினாக்கள் விடைகள், இலக்கணம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், உரைப்பத்தி வினாக்கள் விடைகள், கூடுதல் வினா விடைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- அலகுத் தேர்வு வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- முக்கிய வினாக்கள் (※) மற்றும் அரசு மாதிரி வினா 2019 (அ.மா.வி.) சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- ஆண்டு பொதுத்தேர்வு மே – 2022 வினாத்தாள் விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

**2022-23 புதிய பதிப்பு**

© வெளியீட்டாளர்கள்

ISBN : 978-93-92559-54-9
குறியீட்டு எண் : FY-8-T

எழுதி வழங்கியவர்
கி. லதா, M.A., B.Ed., M.Phil.,

**தலைமை அலுவலகம்:**
**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக்,
16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
☎ 044-4862 9977, 044-486 27755
e-mail : enquiry@surabooks.com
website : www.surabooks.com

**Also available for Std - IV to X**

Guides :

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Science (EM/TM)
- Sura's Social Science (EM/TM)

**Also available for Std - XI, XII**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

# பதிப்பாசிரியர் உரை...

**எங்கள் வாழ்த்திற்குரிய**
**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின் 8ஆம் வகுப்பு - தமிழ் உரைநூல் -** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிய தேர்வுத்திட்டத்தின்படி, 8ஆம் வகுப்பு தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண் பெற, சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.
நலமே விளைக!

– பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு

| | | |
|---|---|---|
| புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு | : | enquiry@surabooks.com |
| புத்தகங்கள் வாங்க | : | orders@surabooks.com |
| தொடர்புக்கு | : | 81242 01000 / 81243 01000 |
| வாட்ஸ்அப் | : | 81242 01000 / 98409 26027 |
| ஆன்லைன் வலைதளம் | : | www.surabooks.com |

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்

23-05-2022



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# பொருளடக்கம்

மனப்பாடச் செய்யுள் பகுதி ........................................................ 1-4

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 1. | மொழி<br>தமிழ் இன்பம் | தமிழ்மொழி வாழ்த்து (செய்யுள்)*<br>தமிழ்மொழி மரபு (செய்யுள்)<br>தமிழ் வரிவடிவ வளர்ச்சி (உரைநடை)<br>சொற்பூங்கா (துணைப்பாடம்)<br>எழுத்துகளின் பிறப்பு (கற்கண்டு)<br>அலகுத் தேர்வு | 5-31 | ஜூன் |
| 2. | இயற்கை<br>ஈடில்லா இயற்கை | ஓடை (செய்யுள்)*<br>கோணக்காத்துப் பாட்டு (செய்யுள்)<br>நிலம் பொது (உரைநடை)<br>வெட்டுக்கிளியும் சருகுமானும் (துணைப்பாடம்)<br>வினைமுற்று (கற்கண்டு)<br>திருக்குறள் (வாழ்வியல்)*<br>அலகுத் தேர்வு | 32-60 | ஜூலை |
| 3. | அறிவியல், தொழில்நுட்பம்<br>உடலை ஓம்புமின் | நோயும் மருந்தும் (செய்யுள்)*<br>வருமுன் காப்போம் (செய்யுள்)*<br>தமிழர் மருத்துவம் (உரைநடை)<br>தலைக்குள் ஓர் உலகம் (துணைப்பாடம்)<br>எச்சம் (கற்கண்டு)<br>அலகுத் தேர்வு | 61-85 | ஆகஸ்ட் |


( * ) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 4. | கல்வி<br>கல்வி கரையில | கல்வி அழகே அழகு (செய்யுள்)* | 86-109 | செப்டம்பர் |
| | | புத்தியைத் தீட்டு (செய்யுள்) | | |
| | | பல்துறைக் கல்வி (உரைநடை) | | |
| | | ஆன்ற குடிப்பிறத்தல் (துணைப்பாடம்) | | |
| | | வேற்றுமை (கற்கண்டு) | | |
| | | அலகுத் தேர்வு | | |
| 5. | கலை, அழகியல், பண்பாடு<br>குழலினிது யாழினிது | திருக்கேதாரம் (செய்யுள்) | 110-139 | அக்டோபர் |
| | | பாடறிந்து ஒழுகுதல் (செய்யுள்)* | | |
| | | நாட்டுப்புறக் கைவினைக்கலைகள் (உரைநடை) | | |
| | | தமிழர் இசைக்கருவிகள் (துணைப்பாடம்) | | |
| | | தொகைநிலை, தொகாநிலைத்தொடர்கள் (கற்கண்டு) | | |
| | | திருக்குறள் (வாழ்வியல்)* | | |
| | | அலகுத் தேர்வு | | |
| 6. | நாகரிகம், தொழில், வணிகம்<br>வையம்புகழ் வணிகம் | வளம் பெருகுக (செய்யுள்) | 140-166 | நவம்பர் |
| | | மழைச்சோறு (செய்யுள்) | | |
| | | கொங்குநாட்டு வணிகம் (உரைநடை) | | |
| | | காலம் உடன் வரும் (துணைப்பாடம்) | | |
| | | புணர்ச்சி (கற்கண்டு) | | |
| | | அலகுத் தேர்வு | | |

( * ) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 7. | நாடு, சமூகம்<br>பாருக்குள்ளே நல்ல நாடு | படைவேழம் (செய்யுள்)* | 167-192 | நவம்பர் |
| | | விடுதலைத் திருநாள் (செய்யுள்) | | |
| | | பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் (உரைநடை) | | |
| | | அறிவுசால் ஔவையார் (துணைப்பாடம்) | | |
| | | வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் (கற்கண்டு) | | |
| | | அலகுத் தேர்வு | | |
| 8. | அறம், தத்துவம், சிந்தனை<br>அறத்தால் வருவதே இன்பம் | ஒன்றே குலம் (செய்யுள்)* | 193-219 | டிசம்பர் |
| | | மெய்ஞ்ஞான ஒளி (செய்யுள்) | | |
| | | அயோத்திதாசர் சிந்தனைகள் (உரைநடை) | | |
| | | மனித யந்திரம் (துணைப்பாடம்) | | |
| | | யாப்பு இலக்கணம் (கற்கண்டு) | | |
| | | திருக்குறள்* | | |
| | | அலகுத் தேர்வு | | |
| 9. | மனிதம், ஆளுமை<br>குன்றென நிமிர்ந்துநில் | உயிர்க்குணங்கள் (செய்யுள்) | 220-242 | ஜனவரி |
| | | இளைய தோழனுக்கு (செய்யுள்) | | |
| | | சட்டமேதை அம்பேத்கர் (உரைநடை) | | |
| | | பால் மனம் (துணைப்பாடம்) | | |
| | | அணி இலக்கணம் (கற்கண்டு) | | |
| | | அலகுத் தேர்வு | | |
| | ஆண்டு பொதுத்தேர்வு மே – 2022 வினாத்தாள் விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளது | | 243-250 | |


( * ) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# மனப்பாடச் செய்யுள்

## கவிதைப் பேழை

**இயல் - 1**

### தமிழ்மொழி வாழ்த்து

※

வாழ்க நிரந்தரம் ! வாழ்க தமிழ்மொழி !
வாழிய வாழியவே !
வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே !
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே !
எங்கள் தமிழ்மொழி ! எங்கள் தமிழ்மொழி !
என்றென்றும் வாழியவே !

– பாரதியார்

**இயல் - 2**

### ஓடை

ஓடை ஆட உள்ளம் தூண்டுதே ! – கல்லில்
உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும் (ஓடை ஆட...)
பாட இந்த ஓடை எந்தப்
பள்ளி சென்று பயின்ற தோடி !
ஏடு போதா இதன்கவிக் கார்
ஈடு செய்யப் போரா ரோடி ! (ஓடை ஆட...)
நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி
நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்
கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்
குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி (ஓடை ஆட...)
நெஞ்சில் ஈரம் இல்லார் நாண
நீளு ழைப்பைக் கொடையைக் காட்டிச்
செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்
சீருக்கு ஏற்ப முழவை மீட்டும். (ஓடை ஆட...)

– வாணிதாசன்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores




இயல் - 2

## திருக்குறள்

### நடுவுநிலைமை

அ.மா.வி 2019

1. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

### கூடா ஒழுக்கம்

4. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.

### கல்லாமை

6. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

### குற்றங்கடிதல்

8. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

- திருவள்ளுவர்

இயல் - 3

## நோயும் மருந்தும்

பேர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி
தீர்தற்கு உரிய திரியோக மருந்துஇவை
ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்
பேர்த்த பிணியுள் பிறவார் பெரிதின்பமுற்றே.

## வருமுன் காப்போம்

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்;
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்தம் உள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீயதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே!

காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!

- கவிமணி தேசிகவிநாயகனார்


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

இயல் – 4

## கல்வி அழகே அழகு

※

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக்கு அழகுசெய் வார்.

– குமரகுருபரர்

இயல் – 5

## பாடறிந்து ஒழுகுதல்

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வௌவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்.

– நல்லந்துவனார்

இயல் – 5

## திருக்குறள்

### தெரிந்து வினையாடல்

2. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

### சொல்வன்மை

7. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

8. சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.

– திருவள்ளுவர்

மனப்பாடச் செய்யுள்

www.surabooks.com

இயல் - 7

## படை வேழம்
## கலிங்கர் தோற்றுச் சிதைந்தோடல்

வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி
மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்
இருவர் ஒருவழி போகல் இன்றியே (2)
ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
உடலின் நிழலினை வெருவி அஞ்சினர்
அருவர் வருவர் எனா இறைஞ்சினர்
அபயம் அபயம் எனநடுங்கியே (3)

- செயங்கொண்டார்

இயல் - 8

## ஒன்றே குலம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே

அ.மா.வி 2019

படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே.

- திருமூலர்

இயல் - 8

## திருக்குறள்

### படைச்செருக்கு

1. கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

### நட்பு

3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

### பண்புடைமை

9. பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

- திருவள்ளுவர்

மனப்பாடச் செய்யுள்

www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


தமிழ் இன்பம்

# இயல் 1 தமிழ்மொழி வாழ்த்து

கவிதைப்பேழை

## ஆசிரியர் குறிப்பு



| | |
|---|---|
| **ஆசிரியர்** | : சி.சுப்பிரமணிய பாரதியார். |
| **பன்முக ஆற்றல்** | : கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர். |
| **எழுதிய நூல்கள்** | : சந்திரிகையின் கதை, தராசு, வசன கவிதைகள், சீட்டுக்கவி |
| **புகழாரம்** | : சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதிதாசன் இவரைப் புகழ்ந்துள்ளார். |
| **பாடப்பகுதி** | : பாரதியார் கவிதைகள் என்னும் தொகுப்பில் தமிழ்மொழி வாழ்த்து என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது. |

## பாடல்

| | |
|---|---|
| வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!<br>வாழிய வாழியவே!<br>வான மளந்தது அனைத்தும் அளந்திடு<br>வண்மொழி வாழியவே!<br>ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி<br>இசைகொண்டு வாழியவே!<br>எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!<br>என்றென்றும் வாழியவே! | சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்<br>துலங்குக வையகமே!<br>தொல்லை வினைதரு தொல்லை அகன்று<br>சுடர்க தமிழ்நாடே!<br>வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி<br>வாழ்க தமிழ்மொழியே!<br>வானம் அறிந்த தனைத்தும் அறிந்து<br>வளர்மொழி வாழியவே! – பாரதியார் |

## சொல்லும் பொருளும்

1. நிரந்தரம் – காலம் முழுமையும்
2. வைப்பு – நிலப்பகுதி
3. சூழ்கலி – சூழ்ந்துள்ள அறியாமை இருள்
4. வண்மொழி – வளமிக்கமொழி
5. இசை – புகழ்
6. தொல்லை – பழமை, துன்பம்

## பொருளுரை

தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ்க! ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான தமிழ்மொழி வாழ்க! ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்ட தமிழ்மொழி வாழ்க!


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழ்க! எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்கட்டும்! அதனால் தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படைக! பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிர்க! தமிழ்மொழி வாழ்க! தமிழ்மொழி வாழ்க! என்றென்றும் தமிழ்மொழி வாழ்க! வானம்வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் தமிழ்மொழி வாழ்க!

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ............ . அ.மா.வி 2019

அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி **விடை: அ) வைப்பு**

2. 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............ . ※

அ) என் + றென்றும் ஆ) என்று + என்றும்
இ) என்றும் + என்றும் ஈ) என் + என்றும் **விடை: ஆ) என்று + என்றும்**

3. 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............ .

அ) வான + மளந்தது ஆ) வான் + அளந்தது
இ) வானம் + அளந்தது ஈ) வான் + மளந்தது **விடை:** இ) வானம் + அளந்தது

4. அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............ .

அ) அறிந்ததுஅனைத்தும் ஆ) அறிந்தனைத்தும்
இ) அறிந்ததனைத்தும் ஈ) அறிந்துனைத்தும் **விடை: இ) அறிந்ததனைத்தும்**

5. வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............ .

அ) வானம்அறிந்து ஆ) வான்அறிந்த
இ) வானமறிந்த ஈ) வான்மறிந்த **விடை: இ) வானமறிந்த**

### தமிழ்மொழி வாழ்த்து - இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.

மோனைச் சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| வாழ்க | - வாழிய | வான மளந்தது | - வண்மொழி |
| எங்கள் | - என்றென்றும் | வாழ்க | - வாழ்க |
| வானம் | - வளர்மொழி | | |

### குறுவினா

1. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது? ※

**தமிழ் புகழ் கொண்டு வாழுமிடம் :** ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து புகழ் கொண்டு வாழ்கிறது.

2. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?

**தமிழின் வளர்ச்சி :** தமிழ்மொழி, வானம் வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளர்கிறது.

இயல் 1


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

## சிறுவினா

**தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.**

**தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகள் :**

(i) தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ்கிறது.

(ii) ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான மொழி.

(iii) ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து புகழ்கொண்ட மொழி.

(iv) எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழும்.

(v) எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்கட்டும். அதனால் தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படையும்.

(vi) பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிரவேண்டும்.

(vii) வானம்வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் தமிழ்மொழியைப் பாரதியார், என்றென்றும் வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறார்.

## சிந்தனை வினா

**பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?**

**பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் :**

(i) தமிழ்மொழி, தமிழ் பேசும் பலருடைய தாய்மொழி. திராவிட மொழிக் குடும்பத்தின் முதன்மையான மொழி. எல்லா மொழிகளுக்கும் தாய்மொழியாக விளங்குகிறது.

(ii) தமிழ், அறிவியல், மருத்துவம், கணிதம் எனப் பலவற்றையும் கூறுகிறது. தமிழர் வானியல் அறிவிலும் சிறந்து விளங்கியுள்ளனர்.

(iii) வான் பற்றிய செய்திகளைக் கூறும் நூல்கள் தமிழில் உள்ளன. ஞாயிறு, திங்கள், விண்மீன் மற்றும் வானில் வலம் வரும் கோள்கள் பற்றியும் ஆராய்ந்து கூறியுள்ளனர் தமிழர்.

(iv) இலக்கியவளம், இலக்கண வளம், சொல்வளம் என எல்லா வளங்களையும் தமிழ்மொழி பெற்றுள்ளதால் பாரதியார் தமிழ்மொழியை வண்மொழி என்று அழைக்கிறார்.



## கற்பவை கற்றபின்

1. **படித்துச் சுவைக்க.**

### செந்தமிழ் அந்தாதி

செந்தமிழே ! செங்கரும்பே ! செந்தமிழர் சீர்காக்கும்
நந்தா விளக்கனைய நாயகியே ! – முந்தை
மொழிக்கெல்லாம் மூத்தவளே ! மூவேந்தர் அன்பே !
எழில்மகவே ! எந்தம் உயிர்.
உயிரும்நீ; மெய்யும்நீ; ஓங்கும் அறமாம்
பயிரும்நீ; இன்பம்நீ; அன்புத் தருவும்நீ;
வீரம்நீ; காதல்நீ; ஈசன் அடிக்குநல்
ஆரம்நீ; யாவும்நீ யே!

– து. அரங்கன்



www.surabooks.com

2. **'தமிழ்மொழி வாழ்த்து' – பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

இப்பாடலை இசையுடன் பாடி பழக வேண்டும்.

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக :**

1. 'தமிழ்மொழி வாழ்த்து' என்னும் தலைப்பில் அமைந்துள்ள பாடல் **பாரதியார் கவிதைகள்** என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.
2. பாரதியார் நடத்திய இதழ்கள் **இந்தியா, விஜயா** .
3. பாரதியாரின் உரைநடை நூல்கள் **சந்திரிகையின் கதை, தராசு.**
4. மொழி மக்களின் **பண்பாட்டுடன்** நெருங்கிய தொடர்புடையது.
5. கருத்தை அறிவிக்கும் கருவி **மொழி**.

**குறுவினா :**

1. **சுப்பிரமணிய பாரதியாரின் பன்முக ஆற்றல்கள் யாவை?**

கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் போன்றவை பாரதியாரின் பன்முக ஆற்றல்கள் ஆகும்.

2. **தமிழ்நாடு எவ்வகைத் துன்பங்கள் நீங்கி ஒளிர வேண்டும்?**

பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிர வேண்டும்.

3. **பாரதிதாசன் பாரதியாரை எவ்வாறெல்லாம் புகழ்ந்துள்ளார்?**

**பாரதிதாசன், பாரதியாரைப் புகழ்ந்தமை :**

(i) சிந்துக்குத் தந்தை
(ii) செந்தமிழ்த் தேனீ
(iii) புதிய அறம் பாட வந்த அறிஞன்
(iv) மறம் பாட வந்த மறவன்.

4. **பாரதியார் இயற்றியவைகளாக நம் பாடப் பகுதியில் குறிப்பிடப்பட்டவை எவை?**

(i) சந்திரிகையின் கதை, தராசு உள்ளிட்ட உரைநடை நூல்கள்.
(ii) வசன கவிதைகள்
(iii) சீட்டுக்கவிகள் ஆகியவையாகும்.

5. **தமிழ்மொழி, எதனால் சிறப்படைய வேண்டும் என்று பாரதியார் கூறுகிறார்?**

(i) தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழ்ந்து, எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருளை நீக்கும்.
(ii) அதனால் தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படைய வேண்டும் என பாரதியார் கூறுகிறார்.

☆ ☆ ☆



www.surabooks.com

தமிழ் இன்பம்

# இயல் 1 தமிழ்மொழி மரபு

கவிதைப்பேழை

## நூற்குறிப்பு



தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர். தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது. பொருளதிகாரத்தின் மரபியலில் உள்ள மூன்று நூற்பாக்கள் (91, 92, 93) இங்குத் தரப்பட்டுள்ளன.

## பாடல்

| | |
|---|---|
| நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்<br>கலந்த மயக்கம் உலகம் ஆதலின்<br>இருதிணை ஐம்பால் இயல்நெறி வாழஅமைத்<br>திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்<br>– தொல்.1579 | மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை<br>மரபுவழிப் பட்ட சொல்லின் ஆன<br>– தொல். 1580<br><br>மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்<br>– தொல் 1581<br>– தொல்காப்பியர் |

## சொல்லும் பொருளும்

1. விசும்பு – வானம்
2. மயக்கம் – கலவை
3. இருதிணை – உயர்திணை, அஃறிணை ※
4. வழாஅமை – தவறாமை
5. ஐம்பால் – ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ※
6. மரபு – வழக்கம்
7. திரிதல் – மாறுபடுதல்
8. செய்யுள் – பாட்டு
9. தழாஅல் – தழுவுதல் (பயன்படுத்துதல்)

## பொருளுரை

இவ்வுலகம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையாகும். இவ்வுலகில் தோன்றிய பொருள்கள் அனைத்தும் இந்த ஐம்பூதங்களின் சேர்க்கையால் உருவானவையே ஆகும். உலகத்துப் பொருள்களை இரு திணைகளாகவும் ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபு. திணை, பால் வேறுபாடு அறிந்து, இவ்வுலகப் பொருள்களை நம் முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும். இம்மரபான சொற்களையே செய்யுளிலும் பயன்படுத்துதல் வேண்டும். தமிழ்மொழிச் சொற்களை வழங்குவதில் இம்மரபு மாறினால் பொருள் மாறிவிடும்.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பறவைகள் ............ பறந்து செல்கின்றன.

அ) நிலத்தில் ஆ) விசும்பில்
இ) மரத்தில் ஈ) நீரில்

விடை: ஆ) விசும்பில்

2. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ............ .

அ) மரபு ஆ) பொழுது
இ) வரவு ஈ) தகவு

விடை: அ) மரபு

3. 'இருதிணை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............ .

அ) இரண்டு + திணை ஆ) இரு + திணை
இ) இருவர் + திணை ஈ) இருந்து + திணை

விடை: அ) இரண்டு + திணை

4. 'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............ .

அ) ஐம் + பால் ஆ) ஐந்து + பால்
இ) ஐம்பது + பால் ஈ) ஐ + பால்

விடை: ஆ) ஐந்து + பால்

### குறுவினா

1. உலகம் எவற்றால் ஆனது? அ.மா.வி 2019

உலகம் ஐம்பூதங்களான நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகியவற்றால் ஆனது.

2. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?

(i) செய்யுளில் திணை, பால், வேறுபாடறிந்து மரபான சொற்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(ii) மரபுகளை மாற்றினால் பொருள் மாறிவிடும்.

### சிந்தனை வினா

நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

(i) உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் இருதிணைகளாகவும் ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறியுள்ளது தமிழ்மொழி. இது இம்மொழியின் மரபு.

(ii) நம் முன்னோர் ஒழுக்கத்தின் அடிப்படையில் உயர்திணை, அஃறிணை எனப் பிரித்துள்ளனர்.

(iii) உயர்திணைக்குரிய பால்களாக ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகியவற்றையும் அஃறிணைக்குரிய பால்களாக ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவற்றையும் வகைப்படுத்திப் பயன்படுத்தியுள்ளனர்.

(iv) இம்மரபினை மாற்றாமல் பயன்படுத்தினால் மட்டுமே பொருள் மாறாமல் இருக்கும். இதனையறிந்த நம் முன்னோர் மரபு மாறாமல் பின்பற்றியுள்ளனர்.

## கற்பவை கற்றபின்

**1. பறவைகளின் ஒலி மரபுகளை எழுதி வருக.**

**(எ.கா)** காகம் கரையும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | ஆந்தை | : அலறும் | (ii) | கிளி | : பேசும் |
| (iii) | குயில் | : கூவும் | (iv) | புறா | : குனுகும் |
| (v) | மயில் | : அகவும் | (vi) | குருவி | : கீச்சிடும் |
| (vii) | கோழி | : கொக்கரிக்கும் | (viii) | சேவல் | : கூவும் |
| (ix) | வண்டு | : முரலும் | (x) | கூகை | : குழறும் |

**2. ஐம்பூதங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படும் வேறு பெயர்களை எழுதுக.**

(i) நிலம் – பூமி, தரை, புவி
(ii) நீர் – புனல், தண்ணீர்
(iii) தீ – அனல், நெருப்பு, கனல்
(iv) காற்று – வளி, கால்
(v) வானம் – ஆகாயம், விண்

**3. ஐம்பூதங்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.**

| நிலம் | தீ |
|---|---|
| நிலத்தின் மறுபெயர் வயலாகும்!<br>நெல் நிலத்தில் பயிராகும்!<br>குறிஞ்சி முல்லை மருதம்<br>நெய்தல் பாலை இவையாவும்<br>நிலமாகும்!  | ஐம் பூதத்தில் ஒன்று தீயாகும்!<br>தரைத்தீ, பரவுத்தீ, காட்டுத் தீ<br>என தீ மூன்றாகும்! நெருப்பு<br>இதன் மறுபெயராகும்!  |
| **நீர்** | **காற்று** |
| நீர்மையுள்ள பொருளே நீராகும்!<br>உயிர்வளி நீர்வளை கொண்ட<br>கலவையாகும்! தண்ணீர்<br>வெந்நீர், பதநீர், இளநீர் என<br>இதன் பொருள் விரியுமே!  | வளிகளின் சேர்க்கை காற்றாகும்!<br>இதுவே உயிரினங்களின்<br>உயிர்மூச்சாகும்!<br>தென்றல் காற்று!<br>சூறைக்காற்று!<br>எனப் பலபெயரில் வலம் வருமே!  |
| **வானம்** | |
| வானம் விண்ணாகுமே! இதில்<br>ஏழு வண்ணம் வானவில்லாக<br>இப் புவியில் தெரியுமே!  | |

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக :**

1. தொல்காப்பியத்தின் ஆசிரியர் <u>தொல்காப்பியர்.</u>
2. நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் <u>தொல்காப்பியம்.</u>
3. தொல்காப்பியம் <u>எழுத்து, சொல், பொருள்</u> என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது.
4. தொல்காப்பிய அதிகாரங்கள் ஒவ்வொன்றும் <u>ஒன்பது</u> இயல்களைக் கொண்டது.
5. வாழ்வுக்குரிய ஒழுங்குமுறை <u>ஒழுக்கம்</u> எனப்படும்.

**குறுவினா :**

**1. தொல்காப்பியம் – குறிப்பு எழுதுக.**

(i) தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர். தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கணநூல் தொல்காப்பியம்.

(ii) இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது.

**2. அளபெடை என்பது யாது?**

அளபெடை – நீண்டு ஒலித்தல். சில எழுத்துகள் அவற்றுக்கு உரிய மாத்திரை அளவை விட நீண்டு ஒலிக்கும். அதனை அளபெடை என்பர்.

**3. உயிரளபெடை என்றால் என்ன?**

உயிரெழுத்துகள் நீண்டு ஒலிப்பதை உயிரளபெடை என்பர். அளபெடுத்ததற்கு அடையாளமாக உயிர்மெய் நெடிலுக்குப் பக்கத்தில் அதன் இனஎழுத்து எழுதப்படும்.
**(எ.கா.)** வழாஅமை (ழா – ழ் + ஆ; ‘ஆ’ – இன எழுத்து ‘அ’).

**4. புலி, சிங்கம், யானை, பசு, ஆடு இவற்றின் இளமைப் பெயர்களை எழுதுக.**

(i) புலி – பறழ் (ii) சிங்கம் – குருளை
(iii) யானை – கன்று (iv) பசு – கன்று (v) ஆடு – குட்டி

**5. புலி, சிங்கம், யானை, பசு, ஆடு இவற்றின் ஒலிமரபினை எழுதுக.**

(i) புலி – உறுமும் (ii) சிங்கம் – முழங்கும்
(iii) யானை – பிளிறும் (iv) பசு – கதறும் (v) ஆடு – கத்தும்

**சிறுவினா :**

**'நிலம், நீர், தீ, வளி, விசும்பு' என்று தொடங்கும் நூற்பாக்களின் மூலம் தொல்காப்பியம் கூறுவனவற்றை எழுதுக.**

(i) இவ்வுலகம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையாகும். இவ்வுலகில் தோன்றிய பொருள்கள் அனைத்தும் இந்த ஐம்பூதங்களின் சேர்க்கையால் உருவானவையே ஆகும்.

(ii) உலகத்துப் பொருள்களை இரு திணைகளாகவும் ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபாகும். திணை, பால் வேறுபாடு அறிந்து, இவ்வுலகப் பொருள்களை நம்முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும்.

(iii) இம்மரபான சொற்களையே செய்யுளிலும் பயன்படுத்துதல் வேண்டும். தமிழ்மொழிச் சொற்களை வழங்குதலில் இம்மரபு மாறினால் பொருள் மாறிவிடும்.

☆ ☆ ☆

தமிழ் இன்பம்

இயல் 1

# தமிழ் வரிவடிவ வளர்ச்சி

உரைநடை உலகம்

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ...................... காரணமாக அமைந்தது.
அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை
இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை
விடை: இ) அச்சுக்கலை

2. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ...................... என அழைக்கப்படுகிறது.
அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து
இ சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து
விடை: ஆ) வட்டெழுத்து

3. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ............. . ※
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
இ) வ.உ. சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
விடை: ஆ) தந்தை பெரியார்

### கோடிட்ட இடத்தை நிரப்புக

1. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ......... என அழைக்கப்பட்டன.
விடை: கண்ணெழுத்துகள் அ.மா.வி 2019

2. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ......... விடை: வீரமாமுனிவர்

### குறுவினா

1. **ஓவிய எழுத்து என்றால் என்ன?**
தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரிவடிவம் ஓவிய எழுத்து எனப்படும்.

2. **ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?**
(i) ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் முதல் ஓசையைக் குறிப்பதாயிற்று.
(ii) இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலை, ஒலி எழுத்து நிலை எனப்பட்டது.

3. **ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?**
(i) ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளைப் பயன்படுத்தினர்.

தமிழ் இன்பம்

www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


(ii) புள்ளிகளைப் பயன்படுத்தினால் ஓலைகள் சிதைந்து விடும் என்பதால் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலவில்லை.

**4. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.** ※

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ் | எ | ஒ் | ஒ | ெக் | கெ | ெகா் | கொ |
| எ | ஏ | ஒ | ஓ | கெ | கே | கொ | கோ |

**சிறுவினா**

**1. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.**

(i) ஓலைச்சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.

(ii) ஓலைச்சுவடிகளில் நிறுத்தற்குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.

(iii) புள்ளி இடப்பட்டு எழுதப்படும் இடங்களில் புள்ளிகள் தெளிவாகத் தெரியாத நிலையில் அவற்றின் இடம் நோக்கி மெய்யா, உயிர்மெய்யா, குறிலா நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது.

(iv) இதனால் படிப்பவர்கள் பெரிதும் இடருற்றனர். எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

**2. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.** அ.மா.வி 2019

**தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றம் :**

(i) தமிழ் எழுத்துகளில் நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால்(ா) பயன்படுத்தப்படுகிறது.

(ii) ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப் புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக் கொம்பு (ை) பயன்படுத்தப்படுகிறது.

(iii) ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப் புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுத்தப்படுகிறது.

(iv) குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின் மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டது.

**நெடுவினா**

**எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.** ※

**முன்னுரை :**

மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துகளையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்கச் சைகைகளைப் பயன்படுத்தினான். பிறகு ஒலிகள் மூலம் வெளிப்படுத்தினான். அடுத்துச் சிறிது சிறிதாகச் சொற்களைச் சொல்லக் கற்றுக் கொண்டான். காலப் போக்கில் அவை பேச்சு மொழியாக உருவானது.

**வரிவடிவத்தின் தொடக்க நிலை :**

மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான். அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலையாகும்.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**ஓவிய எழுத்து :**

தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரிவடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

**ஒலி எழுத்து நிலை :**

அடுத்ததாக ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் முதல் ஓசையைக் குறிப்பதாயிற்று. இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்துநிலை என்பர். இன்று உள்ள எழுத்துகள் ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுகளாகக் கருதப்படுகின்றன.

**தமிழ் எழுத்துகள் :**

காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரி வடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.

**முடிவுரை :**

பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினர். பிறகு அச்சில் ஏற்றப்பட்டது. காலந்தோறும் வளர்ந்து வரிவடிவத்தில் பல மாற்றங்களை ஏற்று, தற்காலத்தில் கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்ற மொழியாக வளர்ந்துள்ளது தமிழ் எழுத்துகள்.

## சிந்தனை வினா

**1. தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**

(i) பள்ளிகளில் தமிழ்மொழியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும். பிறமொழிகளையும் அறிந்து கொள்ளுதல் நன்மை பயக்கும் என்பதால் அவற்றைக் கூடுதலாக கற்க வழிவகை செய்யலாம்.

(ii) தமிழ் வழியில் படிப்பவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

(iii) கன்னித் தமிழைக் கணினித் தமிழில் ஏற்றி உலகெங்கும் பரப்ப வேண்டும்.

(iv) புதியதாகக் கண்டறியப்பட்ட அறிவியல் சாதனங்களுக்கும், பிற துறையில் கண்டறியப்படும் சொற்களுக்கும் கலைச்சொற்களைக் கண்டறிய வேண்டும்.

(v) பிறமொழியில் உள்ள நூல்களைத் தமிழில் எளிமையான முறையில் மொழிபெயர்க்க வேண்டும்.

(vi) சிறந்த தமிழ் நூல்கள் நிறைந்த, இலவச நூலகங்களை நாடெங்கிலும் அமைக்க வேண்டும்.

(vii) ஒவ்வொரு துறைக்கும் எளிமையான தமிழில் நூல்கள் வெளியிடப்பட வேண்டும்.

**2. தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதால் தமிழுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து கலந்துரையாடவும்.**

**மாணவன் 1** : தமிழ்மொழியை உரோமன் எழுத்துருவில் எழுதுவது எவ்வளவு எளிமையாக உள்ளது பார்த்தாயா?

**மாணவன் 2** : அவ்வாறு எழுதுவதே தவறான செயல். இதை எளிமை என்று மகிழ்கிறாயா?

**மாணவன் 1** : தவறு என்று ஏன் கூறுகிறாய்? தவறொன்றும் இல்லை. ஏனெனில் தொண்ணூறு சதவீத மாணவர்கள் ஆங்கில வழியில் பயில்கின்றனர். அவர்களுக்குத் தமிழ் படிப்பதில் பெரும் சிக்கல் ஏற்படுகிறது. பேச்சுமொழியில் படிப்பதில் மாணவர்கள் இன்னலுறுகின்றனர்.

சுரா இயல் 1

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


**மாணவன் 2** : நீ கூறுவது முற்றிலும் தவறானது. வரிவடிவம்தான் ஒரு மொழியின் அடையாளம். அவ்வாறு இருக்கும் நிலையில் தமிழ்மொழியை உரோமன் எழுத்துருவில் படித்தால் எந்த மொழியில் படிக்கிறோம் என்பதை அறிய முடியுமா? படிப்பவருக்கே குழப்பம்தான் விளையும்.

**மாணவன் 1** : படிப்பவருக்குக் குழப்பம் ஏற்பட வாய்ப்பில்லை. ஏனெனில் அவருக்குத் தமிழ் படிப்பதில் தகராறு. உரோமன் எழுத்துருவில் படிப்பது எளிமை என அவர் எண்ணுகிறார்.

**மாணவன் 2** : இக்கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. 'தீ' என்ற தமிழ்ச் சொல்லை உரோமன் எழுத்துருவில் 'the' என்றுதான் எழுதவேண்டும். இதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொருளில்தான் புரிந்து கொள்வார்கள். தமிழ் எழுத்துகளில் ஒலி வேறுபாடறிந்து படிக்க இயலும். அதனை உரோமன் எழுத்துருவில் எழுதும் போது தமிழை அழிப்பதைப் போன்று தோன்றும்.

**மாணவன் 1** : எழுத்துருக்கள் மொழியின் மாறாத அடையாளங்கள் அல்ல. தமிழ்மொழி ஆரம்பக் காலத்தில் பிராமி எழுத்துருவில்தான் எழுதப்பட்டன. அதிலிருந்து வட்டெழுத்துகள் உருவாயிற்று. அதன்பிறகு இன்றைய எழுத்துருக்கள் உருவாயின. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வரிவடிவத்தைப் பெற்றுள்ளன. அதுபோல தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதும் ஒரு மாற்றம் தானே?

**மாணவன் 2** : "எழுத்தாகிய உடல் இல்லையேல், மொழியாகிய உயிர் அழியும்" என்பார் பேராசிரியர் முனைவர் சி. இலக்குவனார். அவர் வழியில் நாம் உடலாகிய எழுத்துரு அழியாமல் பாதுகாக்க வேண்டும்.

**மாணவன் 1** : மொழிக்கும் எழுத்துருவுக்குமான உறவு என்பது ஒரு மனப்பயிற்சிதான். பயிற்சியின் மூலம்தான் நாம் ஒரு மொழியைக் கற்கிறோம். உரோமன் எழுத்துருவில் எழுத்துகளை உச்சரிப்பது எளிமையானது.

**மாணவன் 2** : நீ கூறுவது, உன்னுடைய மாயை. ஒரு வரிவடிவில் மற்றொரு மொழியைப் படிப்பதால் அம்மொழியை அறிந்தவர் ஆவோம் என்பது அறியாமை ஆகும். தமிழில் எழுத்து வடிவத்திற்கும் உச்சரிப்புக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. எழுதுவதை அப்படியே சரியான உச்சரிப்புடன் வாசிக்க இயலும். உரோமன் எழுத்து முறையே வேறு. அதில் தமிழ்மொழியில் உள்ளது போல் வரிவடிவத்திற்கும் உச்சரிப்பிற்கும் தொடர்பு இருக்காது. உச்சரிப்பைத் தனியே கற்றுக் கொள்வதற்கென்று உச்சரிப்பு அகராதி தேவைப்படுகிறது.

**மாணவன் 1** : நீ சொல்வது சரி தான். தெளிவான அமைப்பு முறை அடிப்படைத் தமிழில் இருக்கும்போது நாம் ஏன் உரோமன் எழுத்தில் தமிழை எழுத வேண்டும்.

**மாணவன் 2** : நமக்கு நம் தாய்மொழியான தமிழ்தான் பண்பாட்டு, இன அடையாளம். எழுத்து வடிவம் அழிந்தால் மொழி அழியும்; மொழி அழிந்தால் இனம் அழியும் என்ற வரலாற்று உண்மையை மறக்கக்கூடாது.

**மாணவன் 1** : சரியாகச் சொன்னாய். இனிமேல் நானும் என்னை மாற்றிக் கொள்கிறேன். முகநூல், புலனம், கீச்சகம் போன்றவற்றில் இனிமேல் தமிழிலேயே செய்தியைப் பரிமாறுவோம் என உறுதிகொள்வோம். பிறரையும் மாற்றுவோம்.

**மாணவன் 2** : நான் கூறியதைக் கேட்டு உன் கருத்தை மாற்றிக் கொண்டதற்கு நன்றி. நாம் அனைவரும் தமிழ்மொழியின் நிலையான தன்மையை உணர்ந்து பிறருக்கும் உணர்த்துவோம்.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

## கற்பவை கற்றபின்

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள பழைய வரிவடிவச் சொற்களை எடுத்து எழுதி, அவற்றை இன்றைய வரிவடிவில் மாற்றி எழுதுக.**

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்னைகள் பற்றிய இந்தியாவின் கவலை பல்லாண்டு காலமாக வளர்ந்தே வருகிறது.

'மனிதன் ஏழ்மையிலே இருக்கும்போது சத்தற்ற உணவினுலும், நோயினுலும் அச்சுறுத்தப்படுகிருன்; பலவீனனுக இருப்பவன் போருக்கு அஞ்சுகிருன்; செல்வந்தனுக இருப்பவனே தன் கொழுத்த செல்வத்தால் உண்டான அசுத்தத்திற்கு அஞ்சுகிருன்' என்றெல்லாம் திருமதி இந்திராகாந்தி அன்றைக்கு ஆற்றிய உரை நாம் நினைவு கூரத் தக்கது.

| பழைய வரிவடிவச் சொற்கள் | இன்றைய வரிவடிவச் சொற்கள் | பழைய வரிவடிவச் சொற்கள் | இன்றைய வரிவடிவச் சொற்கள் |
|---|---|---|---|
| சூழ்நிலை | சூழ்நிலை | பிரச்னைகள் | பிரச்சனைகள் |
| கவலை | கவலை | உணவினுலும் | உணவினாலும் |
| நோயினுலும் | நோயினாலும் | அச்சுறுத்தப் படுகிருன் | அச்சுறுத்தப்படுகிறான் |
| பலவீனனுக | பலவீனனாக | அஞ்சுகிருன் | அஞ்சுகிறான் |
| செல்வந்தனுக | செல்வந்தனாக | இருப்பவனே | இருப்பவனோ |
| நினைவு | நினைவு | | |

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக :**

1. எழுத்துகளின் <u>வரிவடிவங்கள்</u> மொழிக்கு மொழி வேறுபடுகின்றன.
2. மனிதன் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் <u>குறியீடுகளாகப்</u> பொறித்து வைத்தான்.
3. பொருளின் ஓவிய வடிவமாக இருந்த வரிவடிவம் <u>ஓவிய எழுத்து.</u>
4. ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலை <u>ஒலி எழுத்து நிலை.</u>
5. தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்கள் காணப்படும் இடங்கள் கோவில்களிலுள்ள <u>கருங்கல் சுவர்கள்.</u>
6. கல்வெட்டுகள் <u>மூன்றாம் நூற்றாண்டு</u> முதல் கிடைக்கின்றன.
7. செப்பேடு, கல்வெட்டில் காணப்படும் வரிவடிவங்கள் <u>வட்டெழுத்து, தமிழெழுத்து</u> என இருவகைப்படும்.
8. <u>அரச்சலூர் கல்வெட்டில்</u> தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன.
9. எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் இடம்பெற்ற எழுத்துகள் <u>வட்டெழுத்துகள்.</u>
10. முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலம் <u>பதினொன்றாம் நூற்றாண்டு.</u>

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


11. 'கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி' என்னும் தொடர் இடம்பெற்ற நூல் **சிலப்பதிகாரம்.**
12. பழங்காலத்தில் **கற்பாறை, செப்பேடு, ஓலை** போன்றவற்றில் எழுதினர்.
13. தமிழ்மொழியை எழுத இருவகை எழுத்துகள் இருந்ததற்குச் சான்றாக அமைந்த கல்வெட்டு **அரச்சலூர் கல்வெட்டு.**
14. பாறைகளில் செதுக்கும்போது பயன்படுத்த முடியாதது **வளைகோடுகள்.**
15. பாறைகளில் செதுக்கும்போது பயன்படுத்தப்பட்டவை **நேர்** கோடுகள்.
16. தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் **வீரமாமுனிவர்.**
17. ஒற்றைப்புள்ளி, இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக பயன்படுத்தப்படுபவை **துணைக்கால்(ா), இணைக்கொம்பு(ை), கொம்புக்கால்(ள).**
18. தமிழ்மொழி **கணினிப்** பயன்பாட்டிற்கு ஏற்ற மொழியாகவும் ஆகியிருக்கிறது.
19. மனிதன் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிக்க கண்டுபிடித்தது **மொழி.**

**பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினர். அந்தந்தப் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப எழுத்துகளின் வடிவங்கள் அமைந்தன. பாறைகளில் செதுக்கும்போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது என்பதால் நேர்க்கோடுகள் பயன்படுத்தப்பட்டன. ஓலைகளில் நேர்க்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர். சில எழுத்துகளை அழகுபடுத்துவதற்காக அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக்கோடு இடப்பட்டது. பின்னர் அவையே நிலையான வடிவங்களாக அமைந்துவிட்டன.

**வினாக்கள்.**

1. **பழங்காலத்தில் எழுத்துகள் எவற்றில் எழுதப்பட்டது?**

   பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுத்துகள் எழுதப்பட்டன.

2. **நேர்க்கோடுகள் எதற்காக பயன்படுத்தப்பட்டது?**

   பாறைகளில் செதுக்கும்போது வளைகோடுகளை பயன்படுத்த முடியாது என்பதால் நேர்க்கோடுகள் பயன்படுத்தப்பட்டன.

3. **எழுத்துகளை அழகுப்படுத்த அவற்றின் மேல் எதை இட்டனர்.**

   எழுத்துகளை அழகுப்படுத்த அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக்கோடு இட்டனர்.

**குறுவினா :**

1. **எழுத்து வடிவத்தின் தொடக்கநிலை யாது?**

   மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான். அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்கநிலை ஆகும்.

2. **தமிழ் எழுத்துகள் எப்போது நிலையான வடிவத்தைப் பெற்றன?**

   காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரிவடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

3. **கண்ணெழுத்து - குறித்து எழுதுக.**

கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன. இதனைச் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும், 'கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி' என்னும் தொடரால் அறியலாம்.

4. **எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட காரணங்களாக அமைந்தவை யாவை?**

எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட எழுதப்படும் பொருள்களின் தன்மை, அழகுணர்ச்சி போன்றவை காரணங்களாக அமைந்தன.

5. **தமிழ்மொழியின் வரிவடிவ வளர்ச்சியின் இன்றைய நிலை யாது?**

காலந்தோறும் ஏற்பட்ட வரிவடிவ வளர்ச்சி காரணமாகத் தமிழ்மொழியைப் பிற மொழியினரும் எளிதில் கற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்மொழி கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்ற மொழியாகவும் மாற்றம் பெற்றுள்ளது.

## சிறுவினா :

1. **பேச்சுமொழி எவ்வாறு உருவானது?**

(i) மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துகளையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்கச் சைகைகளைப் பயன்படுத்தினான்.

(ii) காலப்போக்கில் தனது குரலைப் பயன்படுத்தி ஒலிகள் மூலம் தனது கருத்துகளை வெளிப்படுத்த முற்பட்டான்.

(iii) அடுத்துச் சிறிது சிறிதாகச் சொற்களைச் சொல்லக் கற்றுக்கொண்டான். அவை மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டதால் செம்மைப்பட்டுக் காலப்போக்கில் அவை பண்பட்டுப் பேச்சுமொழி உருவானது.

2. **தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்கள் பற்றி எழுதுக.**

(i) தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களை கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும் செப்பேடுகளிலும் காணமுடிகிறது.

(ii) கல்வெட்டுகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. செப்பேடுகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.

(iii) கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம்.

3. **பெரியார் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் நான்கனை எழுதுக.**

| பழைய வடிவம் | புதிய வடிவம் |
|---|---|
| ணா (பழைய வடிவம்) | ணா |
| னா (பழைய வடிவம்) | னா |
| ணை (பழைய வடிவம்) | ணை |
| னொ (பழைய வடிவம்) | னொ |

4. **இரு வகையான எழுத்துகள் பற்றி எழுதுக.**

(i) வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்து மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும். தமிழெழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவம் ஆகும்.

(ii) சேர மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் வட்டெழுத்துகளே இடம் பெற்றுள்ளன.

(iii) முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழ் எழுத்துகள் காணப்படுகின்றன.

**5. தமிழ் எழுத்துகளில் புள்ளிகளின் நிலை பற்றி எழுதுக.**

(i) எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்துள்ளது.

(ii) எடுத்துக்காட்டாக ஏ்து என எழுதப்பட்டால் எது என்றும் எது என எழுதப்பட்டால் ஏது என்றும் ஒலித்தனர்.

(iii) அகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டால் அவை நெடிலாகக் **(க. = கா, த. = தா)** கருதப்பட்டன.

(iv) ஐகார எழுத்துகளைக் குறிப்பிட எழுத்துகளின் முன் இரட்டைப் புள்ளி இட்டனர். **(..க =கை)**

(v) எகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்து இருபுள்ளிகள் இடப்பட்டால் அவை ஔகார வரிசை எழுத்துகளாகக் கருதப்பட்டன. **(கெ.. = கௌ, தெ..= தௌ).**

(vi) மகர எழுத்தைக் குறிப்பிட, பகர எழுத்தின் உள்ளே புள்ளி இட்டனர். (ப்)

(vii) குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளைக் குறிக்க அவற்றின் மேலேயும் புள்ளி இட்டனர்.

## நெடுவினா :

**எழுத்துச் சீர்திருத்தத்தில் வீரமாமுனிவர், பெரியார் மேற்கொண்டவை எவை?**

**வீரமாமுனிவர் :**

தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர். எகர, ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை அவர் களைந்தார். எ என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு ஏ என்னும் எழுத்தை நெடிலாகவும் ஒ என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு ஓ என்னும் எழுத்தாகவும் உருவாக்கினார்.

அதேபோல ஏகார ஓகார வரிசை உயிர்மெய் நெடில் எழுத்துகளைக் குறிக்க இரட்டைக்கொம்புடே இரட்டைக் கொம்புடன் கால் சேர்த்து (ே ர) புதிய வரி வடிவத்தை அறிமுகப்படுத்தினார்.

**வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம் :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ் | எ | ஒ் | ஒ | கெ் | கெ | கொ் | கொ |
| எ | ஏ | ஒ | ஓ | கெ | கே | கொ | கோ |

**பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் :**

இருபதாம் நூற்றாண்டு வரை ணா, றா, னா ஆகிய எழுத்துகளை ணு, று, னு என எழுதினர். அதே போல ணை, லை, ளை, னை ஆகிய எழுத்துகளை ணை, லை, ளை, னை என எழுதினர். இவற்றை அச்சுக்கோப்பதற்காக இவ்வெழுத்துகளுக்குத் தனி அச்சுகள் உருவாக்கப்பட வேண்டியிருந்தது. இக்குறைகளை நீக்குவதற்காகத் தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார். அவரது எழுத்துச் சீர்திருத்தங்கள் சில ஏற்கப்பட்டுத் தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | பழைய வடிவம் | சீர்திருத்த வடிவம் | சான்று |
|---|---|---|---|
| 1. | ணு | ணா | அண்ணு – அண்ணா |
| 2. | ணை | ணை | அணை – அணை |
| 3. | ணொ | ணொ | மண்ணொடு – மண்ணொடு |

| | | | |
|---|---|---|---|
| 4. | ணே | ணோ | கண்ணேடு – கண்ணோடு |
| 5. | லே | லை | தலே – தலை |
| 6. | ளே | ளை | களே – களை |
| 7. | று | றா | சிறுர் – சிறார் |
| 8. | றெ | றொ | மற்றெரு – மற்றொரு |
| 9. | றே | றோ | காற்றெடு – காற்றோடு |
| 10. | னு | னா | மன்னு – மன்னா |
| 11. | னே | னை | வினே – வினை |
| 12. | னெ | னொ | என்னெடு – என்னொடு |
| 13. | னே | னோ | என்னேடு – என்னோடு |

☆ ☆ ☆

தமிழ் இன்பம்

இயல் 1

# சொற்பூங்கா

விரிவானம்

## ஆசிரியர் குறிப்பு

**ஆசிரியர்** : இரா. இளங்குமரனார் (செந்தமிழ் அந்தணர்)

**பணி** : பள்ளி ஆசிரியர்

**பன்முக ஆற்றல்** : நூலாசிரியர், இதழாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர்

**எழுதிய நூல்கள்** : இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம்

**தொகுப்பு நூல்** : தேவநேயம்

**சிறப்புகள்** : திருச்சிக்கு அருகில் அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலையும், பாவாணர் நூலகமும் அமைத்துள்ளார்.

**பாடப்பகுதி** : தமிழின் தனிப்பெருஞ் சிறப்புகள் என்னும் நூலிலிருந்து செய்திகள் தொகுத்து இங்குத் தரப்பட்டுள்ளன.

## மதிப்பீடு

**தமிழில் ஒரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :**

தமிழ்மொழி செந்தமிழாகவும் உயிரோட்டத் தமிழாகவும் விளங்குகிறது. தமிழ்மொழி சொல்வளம் மிக்கமொழி என்பதை இக்கட்டுரையின் மூலம் பார்ப்போம்.

தமிழ் இன்பம்

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


**மொழி வகை :**

தமிழில் ஓர் எழுத்துமொழி, ஈரெழுத்து மொழி, இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகையாக உள்ளது. “நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி” என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

**ஓரெழுத்து ஒருமொழி :**

உயிர் வரிசையில் ஆறு எழுத்துகளும், ம வரிசையில் ஆறு எழுத்துகளும், த, ப, ந என்னும் வரிசைகளில் ஐந்து எழுத்துகளும், க, ச, வ என்னும் வரிசைகளில் நான்கு எழுத்துகளும், ய வரிசையில் ஒன்றும் ஆக நாற்பது நெடில்கள் ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் என்றார் நன்னூலார். நொ, து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு என்றார்.

**கலைச்சொல் வடிவம் :**

பூ, கா என்ற ஒரு இரு ஓரெழுத்து ஒருமொழியை இணைத்து பூங்கா என வழங்கினர். ஆ, மா இரண்டையும் ஆமா என்னும் சொல் உருவாக்கப்பட்டு காட்டுப் பசுவைக் குறித்தது. மாநிலம், மாநாடு, மாஞாலம் இச்சொற்களில், மா என்பது பெரிய என்ற பொருளை தந்தது. அரிமா, பரிமா, கரிமா என்று விலங்கினப் பெயராகிறது.

**இக்கால வழக்கு :**

ஈ என்ற சொல் ஒலிக்குறிப்பைக் காட்டும்; பூச்சி வகையைச் சுட்டும்; வழங்குதல் என்னும் பொருளை உணர்த்தும். வெளிப்படை ஆகும். “ஈ என்று பல்லைக் காட்டாதே” என்று அறிவுரை கூறவும் பயன்படும். போ, வா, நீ, சூ, சே, சை, சோ என்பவை இக்காலத்தில் வழங்கும் சொற்களாகும்.

**மாற்றம் பெற்றவை :**

ஆன், மான், கோன், தேன், பேய் ஆகியவை முறையே ஆ, மா, கோ, தே, பே என மாறியது. கூடு, பொருந்து, சேர் என்னும் பொருளை உடைய “ஏய்” அழைத்தல் பொருளைக் குறித்தது. “ஏ” என வழக்கில் மாறிவிட்டது. ஏவலன், ஏகலை, ஏகலைவன் என்ற சொற்களும் “ஏ” வை அடிச்சொல்லாக மாற்றம் பெற்றவை.

**முடிவுரை :**

தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிச் சொற்களின் பெருக்கம் நம் மொழியின் பழமை, உயிரோட்டம், பெருவழக்கு என்பவனவற்றைக் கையில் கனியாகக் காட்டும். இத்தகைய தமிழ்மொழியின் சொற்களை, மொழிப்பற்றை மீட்டெடுத்தலே வழிகாட்டிகளுக்கு முதல் கடமையாய் நிற்கிறது. மொழிப்பற்றுள்ள ஒருவனே மொழியை வளர்ப்பான்; அதன் இனத்தை, பண்பாட்டைக் காப்பான்.

## கற்பவை கற்றபின்

**ஓரெழுத்து ஒரு மொழிகள் இடம் பெறுமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.**

(i) பழங்காலத்தில் போர் தொடங்கும் முன் **ஆ**நிரைகளைக் கவர்ந்து வருவர். (ஆ– பசு)

(ii) “கனமான பொருளைத் தூக்காதே, **வை**” என்று தாய் மகனிடம் கூறினார்.

(iii) கந்தனுக்கு முருகன் **கை** கொடுத்து உதவி செய்தான்.

(iv) **தை** மாதம் முதல் நாள் பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படும்.

(v) “**நீ** எங்கே சென்றாய்?” என்று சீதா ராணியிடம் கேட்டாள்.

☆ ☆ ☆


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

# அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் .................... .
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ....................
அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

3. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் .................... .
அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு ஈ) கழுத்து

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ................. என அழைக்கப்பட்டன.
5. நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் ...........
6. தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் ....................

**III. பொருத்துக.** (4 × ½ = 2)

7. க், ங் - நாவின் இடை, அண்ணத்தின் இடை
8. ச், ஞ் - நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி
9. ட், ண - நாவின் முதல், அண்ணத்தின் அடி
10. த், ந் - நாவின் நுனி, அண்ணத்தின் நுனி

**IV. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (2 × ½ = 1)

11. கோழி .................... (கூவும்/கொக்கரிக்கும்)
12. பால் ........................ (குடி/பருகு)

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

13. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
14. உலகம் எவற்றால் ஆனது?
15. ஓவிய எழுத்து என்றால் என்ன?
16. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)

17. பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?
18. நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?
19. பேச்சுமொழி எவ்வாறு உருவானது?

**VII. அடிமாறாமல் எழுதுக.** [4]

20. 'தமிழ்மொழி வாழ்த்து' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆ ☆ ☆

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


ஈடில்லா இயற்கை

# இயல் 2

# ஓடை

கவிதைப்பேழை

## ஆசிரியர் குறிப்பு



| | |
|---|---|
| **ஆசிரியர்** | : வாணிதாசன் |
| **இயற்பெயர்** | : அரங்கசாமி என்கிற எத்திராசலு |
| **சிறப்புப் பெயர்கள்** | : கவிஞரேறு, பாவலர்மணி |
| **எழுதிய நூல்கள்** | : **தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம்** |
| **சிறப்புகள்** | : தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுகிறார். தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் வல்லவர். |
| **விருது** | : பிரெஞ்சு அரசு செவாலியர் விருது வழங்கியுள்ளது. |
| **பாடப்பகுதி** | : பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள **ஓடை** என்னும் பாடல் இவரது **தொடுவானம்** என்னும் நூலில் உள்ளது. |

## பாடல்

ஓடை ஆட உள்ளம் தூண்டுதே! – கல்லில்
உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும்
(ஓடை ஆட...)
பாட இந்த ஓடை எந்தப்
பள்ளி சென்று பயின்ற தோடி!
ஏடு போதா இதன்கவிக் கார்
ஈடு செய்யப் போரா ரோடி! (ஓடை ஆட...)

நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி
நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்
கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்
குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி (ஓடை ஆட...)

நெஞ்சில் ஈரம் இல்லார் நாண
நீளு ழைப்பைக் கொடையைக் காட்டிச்
செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்
சீருக்கு ஏற்ப முழவை மீட்டும். (ஓடை ஆட...)

**– வாணிதாசன்**

## சொல்லும் பொருளும்

1. தூண்டுதல் – ஆர்வம் கொள்ளுதல்
2. ஈரம் – இரக்கம்
3. முழவு – இசைக்கருவி
4. நன்செய் – நிறைந்த நீர் வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம்
5. புன்செய் – குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம்
6. வள்ளைப்பாட்டு – நெல்குத்தும் போது பாடப்படும் பாடல்
7. பயிலுதல் – படித்தல்
8. நாணம் – வெட்கம்
9. செஞ்சொல் – திருந்திய சொல்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


## பொருளுரை



நீரோடையில் நீந்தி விளையாட மனம் ஆர்வம் கொள்கிறதே! கற்களில் உருண்டும் தவழ்ந்தும் நெளிந்தும் செல்லும் ஓடையில் நீந்தி விளையாட மனம் ஆர்வம் கொள்கிறதே! சலசல என்று ஒலி எழுப்பியபடி ஓடுவதற்கு இந்த ஓடை எந்தப் பள்ளியில் படித்ததோ? நூல்களால் வருணித்துச் சொல்ல முடியாத இதன் அழகுக்கு இணையாக யாரால் எழுத முடியும்?

நன்செய், புன்செய் நிலங்களுக்கு நீர்வளம் தந்து பயிர்களைச் செழிக்கச் செய்கிறது. அவ்வாறு விளைந்த பயிர்கள் மூலம் உணவு தந்து நாட்டின் வறுமையைப் போக்குகிறது. கொஞ்சி மகிழும் அலைகளால் கரையை மோதுகிறது. குளிர்ச்சியைத் தரும் புற்களுக்கு இன்பம் சேர்க்கிறது. நெஞ்சத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படுமாறு இடையறாது ஓடித் தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது. சிறந்த சொற்களைப் பேசும் பெண்கள் பாடும் வள்ளைப் பாட்டின் சிறப்புக்கேற்ப முழவை முழக்குவது போல் ஒலி எழுப்புகிறது.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பள்ளிக்குச் சென்று கல்வி .................. சிறப்பு
அ) பயிலுதல் ஆ) பார்த்தல் இ) கேட்டல் ஈ) பாடுதல் **விடை:** அ) பயிலுதல்

2. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது .......................
அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு **விடை:** ஆ) ஓடை

3. 'நன்செய்' - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................... .
அ) நன் + செய் ஆ) நன்று + செய்
இ) நன்மை + செய் ஈ) நல் + செய் **விடை:** இ) நன்மை + செய்

4. 'நீளுழைப்பு' - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................ .
அ) நீளு + உழைப்பு ஆ) நீண் + உழைப்பு
இ) நீள் + உழைப்பு ஈ) நீள் + உழைப்பு **விடை:** ஈ) நீள் + உழைப்பு

5. சீருக்கு +ஏற்ப - என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............. .
அ) சீருக்குஏற்ப ஆ) சீருக்கேற்ப
இ) சீர்க்கேற்ப ஈ) சீருகேற்ப **விடை:** ஆ) சீருக்கேற்ப

6. ஓடை + ஆட - என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ....................... . ※
அ) ஓடைஆட ஆ) ஓடையாட
இ) ஓடையோட ஈ) ஓடைவாட **விடை:** ஆ) ஓடையாட

### குறுவினா

1. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?

ஓடை கற்களில் உருண்டும், தவழ்ந்தும், நெளிந்தும், சலசல என்ற ஒலி எழுப்பியபடி ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**2. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்?**

ஓடை எழுப்பும் ஒலிக்கு சிறந்த சொற்களைப் பேசும் பெண்கள் பாடும் வள்ளைப் பாட்டின் சிறப்புக்கேற்ப முழங்கும் முழவையொலியை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்.

## சிறுவினா

**ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?** ※

(i) நன்செய், புன்செய் நிலங்களுக்கு நீர்வளம் தந்து பயிர்களைச் செழிக்கச் செய்கிறது.
(ii) அவ்வாறு விளைந்த பயிர்கள் மூலம் உணவு தந்து நாட்டின் வறுமையைப் போக்குகிறது.
(iii) கொஞ்சி மகிழும் அலைகளால் கரையை மோதுகிறது.
(iv) குளிர்ச்சியைத் தரும் புற்களுக்கு இன்பம் சேர்க்கிறது.
(v) நெஞ்சத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படுமாறு இடையறாது ஓடித் தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது.

## சிந்தனை வினா

**வள்ளைப்பாட்டு என்பது நெல்குத்தும் பொழுது பாடப்படும் பாடலாகும். இதுபோல் வேறு எந்தெந்தச் சூழல்களில் என்னென்ன பாடல்கள் பாடப்படுகின்றன?**

(i) ஏற்றப்பாடல் – ஏற்றத்தின் மூலம் நீர் இறைக்கும்போது பாடப்படும்.
(ii) ஏர்ப்பாடல் – வயலில் மாடுகளைப் பூட்டி ஏர் உழும்போது பாடப்படும்.
(iii) நடவுப் பாடல் – வயலில் நாற்று நடும்போது பாடப்படும்.
(iv) களை எடுப்புப் பாடல் – பயிர்களின் இடையே உள்ள வேண்டாத புல் பூண்டுகளைக் களைந்து எடுக்கும்போது பாடப்படும்.
(v) அறுவடைப் பாடல் – நெல் முற்றியவுடன் அறுவடை செய்யும்போது பாடப்படும்.
(vi) போரடிப் பாடல் – நெற்கதிர்களை உதிர்த்து எடுப்பதற்கு போரடிப்பார்கள். அப்போது பாடப்படும்.

இவையனைத்தும் உழவர்கள் பாடும் பாடல்கள் ஆகும். இதேபோல் மீனவர் பாடல், வண்டிக்காரன் பாடல், சுண்ணாம்பு இடிப்போர் பாடல், படகுக்காரன் பாடல், உப்பளத் தொழிலாளர் பாடல் எனப் பல வகையான தொழில் பாடல்கள் உள்ளன.

## கற்பவை கற்றபின்

**மலை, அருவி, ஓடை, மரங்கள். வயல்கள் இடம் பெறுமாறு ஓர் இயற்கைக் காட்சியை வரைந்து வண்ணம் தீட்டி மகிழ்க.**

மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டியவை.

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக :**

1. தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் <u>கவிஞர் வாணிதாசன்.</u>
2. வாணிதாசனின் இயற்பெயர் <u>அரங்கசாமி என்கிற எத்திராசலு</u>
3. வாணிதாசனின் சிறப்புப் பெயர்கள் <u>கவிஞரேறு, பாவலர்மணி.</u>


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


4. வாணிதாசனுக்குப் பிரெஞ்சு அரசு **செவாலியர்** விருது வழங்கியுள்ளது.
5. பாடப்பகுதியில் உள்ள 'ஓடை' என்னும் பாடல் **தொடுவானம்** என்னும் நூலில் உள்ளது.
6. ஓடையில் ஆட **உள்ளம்** தூண்டும்.
7. கல்லில் உருண்டு தவழ்ந்து நெளிந்து பாய்வது **ஓடை.**
8. ஓடை நன்செய், புன்செய் நிலங்களுக்கு **நீர்வளம்** தந்து பயிர்களைச் செழிக்க செய்கிறது.
9. ஓடை இடையறாது ஓடித் தன் **உழைப்பைக்** கொடையாகத் தருகிறது.
10. ஓடை நாட்டு மக்களின் **வறுமையைப்** போக்குகிறது.

## குறுவினா:

**1. வாணிதாசன் அறிந்த மொழிகள் யாவை?**

**வாணிதாசன் அறிந்த மொழிகள் :** தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு.

**2. வாணிதாசன் இயற்றிய நூல்கள் யாவை?**

தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம்.

**3. ஓடையின் அழகைப் பற்றி வாணிதாசன் கூறுவது யாது?**

சலசல என்று ஒலி எழுப்பியபடி ஓடுவதற்கு இந்த ஓடை எந்தப் பள்ளியில் படித்ததோ? நூல்களால் வருணித்துச் சொல்ல முடியாத இதன் அழகுக்கு இணையாக யாரால் எழுத முடியும்? என்று வாணிதாசன் ஓடையின் அழகைப் பற்றிக் கூறுகிறார்.

**4. ஓடையைப் பார்த்ததும் தன் மனநிலை எவ்வாறு உள்ளது என்று கவிஞர் கூறுகிறார்?**

நீரோடையைப் பார்த்ததும் நீரோடையில் நீந்தி விளையாட மனம் ஆர்வம் கொள்கிறது. கற்களில் உருண்டும் தவழ்ந்தும் நெளிந்தும் செல்லும் ஓடையில் நீந்தி விளையாட மனம் ஆர்வம் கொள்கிறது என்று கவிஞர் கூறுகிறார்.

**5. நம் மனத்தை மயக்க வல்லவை எவை?**

கவின்மிகு காலைப்பொழுதும், மயக்கும் மாலைப்பொழுதும், பிறை நிலவும், ஓடும் ஓடையும், பாயும் ஆறும், கத்தும் கடலும் நம் மனத்தை மயக்க வல்லவை.

**6. ஓடையின் கொடையைப் பற்றி வாணிதாசன் கூறுவது யாது?**

நெஞ்சத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படுமாறு இடையறாது ஓடித் தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது.

## சிறுவினா :

**கவிஞர் வாணிதாசன் குறிப்பு எழுதுக.**

| | |
|---|---|
| ஆசிரியர் பெயர் | : வாணிதாசன் |
| இயற்பெயர் | : அரங்கசாமி என்ற எத்திராசலு. இவர் பாரதிதாசனின் மாணவர். தமிழகத்தின் 'வேர்ட்ஸ் வொர்த்' எனப் புகழப்படுபவர். |
| அறிந்த மொழிகள் | : தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு |
| சிறப்புப்பெயர் | : கவிஞரேறு, பாவலர்மணி |
| பெற்ற விருது | : பிரெஞ்சு அரசு செவாலியர் விருது வழங்கியது |
| இயற்றிய நூல்கள் | : தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம். |

☆ ☆ ☆




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


ஈடில்லா இயற்கை

இயல் 2

# கோணக்காத்துப் பாட்டு

கவிதைப்பேழை

## பாடப்பகுதி

நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில், மக்கள் பட்ட துயரங்களை, அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் கும்மிப் பாடல்களாகப் பாடினர். பேச்சுத் தமிழில் அமைந்த இவை பஞ்சக்கும்மிகள் என்று அழைக்கப்பட்டன. **புலவர் செ. இராசு** தொகுத்த **பஞ்சக்கும்மிகள்** என்னும் நூலில் இடம்பெற்றுள்ள **வெங்கம்பூர் சாமிநாதன்** இயற்றிய **கோணக்காத்துப் பாட்டு** என்னும் **காத்து நொண்டிச் சிந்திலிருந்து** சில பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

## பாடல்

உருமங்கட் டியமுகிலால் – கோணக்காத்து
  உழன்று உழன்றுமெத்த அடித்ததினால்
பெரிதான வீடுகளெல்லாம் – கோப்புடனே
  பிரிந்தும் கூரைத்தட்டுச் சரிந்ததங்கே

சிங்காரமாய் வாங்கல்நகரில் – வைத்திருந்த
  தென்னம்பிள்ளை அத்தனையும் வின்னமாச்சுதே
மங்காத காங்கயநாட்டில் – மேட்டுக்காட்டில்
  மாளாத பருத்திஎல்லாம் கோலாகப்போச்சுதே

ஆரங்கள்வைத்த சுவரெல்லாம் – மெத்தைவீடு
  அடியோடே விழுந்ததங்கே கெடிகலங்கித்
தாரங்களும் பிள்ளைகளுடன் – கூட்டிக்கொண்டு
  தானடந்து வேகமுடன் கூகூ வென்றார்

வாகுடனே தொண்டைமான்சீமை – தன்னிலே
  வளர்ந்தோங்கும் மாநகரம் தன்னிலேதானே
சேகரமாய் வைத்தமரங்கள் – அத்தனையும்
  சின்னபின்ன மாய்ஒடிந்து பின்னமாச்சுதே

சம்பிரமுடன் கப்பல்களெல்லாம் – கடலிலே
  தானடந்து வேகமுடன் வரும்போதிலே
கொம்புசுத்திக் கோணக்காத்து – காலனைப்போல்
  கோணமழை வந்துகப்பல் தான்கவிழ்ந்ததே

ஆர்க்காடு மைசூர்வரைக்கும் –கோணக்காத்து
  அலறி அலறிமெத்த அடித்ததனால்
மார்க்கமான சாலையில்போன – சனங்களெல்லாம்
  மயங்கி மயங்கிமெத்தத் தவிர்த்தார்களே

தெத்துக்காடு காளப்பநாயக்கன் – பட்டியிலே
  செத்திறந்த ஆடுமாடு மெத்தவுண்டாம்
சித்தர்கள் பொருந்திவாழும் – கொல்லிமலை
  சேர்ந்திருந்த நாடெல்லாம் காத்தடிச்சுதே

இப்படிக்கிச் சேதங்களானால் – குமரேசா
  எப்படிப் பிழைத்துநாங்கள் ஒப்பிதமாவோம்
மெய்ப்புடன்வே லாயுதங்கொண்டு – வருகின்ற
  விக்கினமெல் லாம்தீர்த்துக் காத்திடீரையா

– **வெங்கம்பூர் சாமிநாதன்**

## சொல்லும் பொருளும்

※

1. முகில் – மேகம்
2. வின்னம் – சேதம்
3. கெடிகலங்கி – மிக வருந்தி
4. வாகு – சரியாக
5. சம்பிரமுடன் – முறையாக
6. காலன் – எமன்
7. சேகரம் – கூட்டம்
8. மெத்த – மிகவும்
9. காங்கேய நாடு – கொங்குமண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்று.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

## பொருளுரை



திரண்டு எழுந்த மேகங்களால் உருவான காற்று வேகமாக அடித்ததால் பெரிய வீடுகளின் கூரைகள் எல்லாம்மொத்தமாகப் பிரிந்துசரிந்தன. வாங்கல்என்னும் ஊரில் அழகாக வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் வீணாயின. அழிவில்லாத காங்கேய நாட்டின் மேட்டுப் பகுதிகளில் வளர்ந்திருந்த பருத்திச் செடிகள் எல்லாம் சிதைவு அடைந்து வெறும் குச்சிகளாக மாறின.

அழகிய சுவர்களை உடைய மாடி வீடுகள் அடியோடு விழுந்தன. ஆடவர்கள் மனைவி, பிள்ளைகளுடன் 'கூகூ' என்று அலறியபடி ஓடினர். தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னாபின்னமாக ஒடிந்து விழுந்தன. கடலில் விரைந்து வந்த கப்பல், எமனைப் போல வந்த பெருமழையினாலும் சுழல் காற்றினாலும் கவிழ்ந்தது.

ஆர்க்காடு முதல் மைசூர் வரை வீசிய புயலால் சாலைகளில் சென்ற மக்கள் தடுமாறித் தவித்தனர். தெத்துக்காடு, காளப்பநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் ஏராளமான ஆடு, மாடுகள் இறந்தன. சித்தர்கள் வாழும் கொல்லி மலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புயல் அடித்தது.

முருகப் பெருமானே! இத்தகைய அழிவுகளை நாங்கள் எவ்வாறு தாங்குவோம்? எங்களுக்கு வருகின்ற இடர்களை எல்லாம் தடுத்து எங்களைக் காப்பாயாக!

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **வானில் கரு ............ தோன்றினால் மழை பொழியும் என்பர்.**
அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல் **விடை: அ) முகில்**

2. **முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ............... யும் ஒட்டிவிடும்.**
அ) பாலனை ஆ) காலனை
இ) ஆற்றலை ஈ) நலத்தை **விடை: ஆ) காலனை**

3. **'விழுந்ததங்கே' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............... .**
அ) விழுந்த + அங்கே ஆ) விழுந்த + ஆங்கே
இ) விழுந்தது + அங்கே ஈ) விழுந்தது + ஆங்கே **விடை: இ) விழுந்தது + அங்கே**

4. **'செத்திறந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............... .**
அ) செ + திறந்த ஆ) செத்து + திறந்த
இ) செ + இறந்த ஈ) செத்து + இறந்த **விடை: ஈ) செத்து + இறந்த**

5. **பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............... .**
அ) பருத்திஎல்லாம் ஆ) பருத்தியெல்லாம்
இ) பருத்தெல்லாம் ஈ) பருத்திதெல்லாம் **விடை: ஆ) பருத்தியெல்லாம்**

### குறுவினா

1. **கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகக் கோணக்காத்துப் பாட்டு கூறுவது யாது?**
**கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகக் கோணக்காத்துப் பாட்டு கூறுவது :** கடலில் விரைந்து வந்த கப்பல், எமனைப் போல வந்த பெருமழையினாலும் சுழல் காற்றினாலும் கவிழ்ந்தது.

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


2. **புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?**

**புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு :** தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னாபின்னமாக ஒடிந்து விழுந்தன.

3. **கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?** ※

(i) சித்தர்கள் கொல்லிமலையில் வாழ்கின்றனர்.

(ii) கொல்லிமலை சுற்றி உள்ள பகுதிகளிலும் புயல் அடித்தது.

## சிறுவினா

1. **புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?**

**புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள்:** ※

(i) வாங்கல் என்னும் ஊரில் அழகாக வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் வீணாயின.

(ii) அழிவில்லாத காங்கேய நாட்டின் மேட்டுப் பகுதிகளில் வளர்ந்திருந்த பருத்திச் செடிகள் எல்லாம் சிதைவு அடைந்து வெறும் குச்சிகளாக மாறின.

(iii) தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னாபின்னமாக ஒடிந்து விழுந்தன.

2. **கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?** அ.மா.வி 2019

கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் : திரண்டு எழுந்த மேகங்களால் உருவான காற்று வேகமாக அடித்ததால் பெரிய வீடுகளின் கூரைகள் எல்லாம் மொத்தமாகப் பிரிந்து சரிந்தன. அழகிய சுவர்களை உடைய மாடி வீடுகள் அடியோடு விழுந்தன.

## சிந்தனை வினா

**இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?**

**இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் :**

**புயல், மழை :**

ஏரிக்கரை மற்றும் ஆற்றோரச் சாலைகளில் நடப்பதைத் தவிர்க்க வேண்டும்; மரங்களின் கீழே நிற்பதைத் தவிர்க்க வேண்டும். சாக்கடை நீர் வடிகால்கள், வாய்க்கால்கள் போன்றவற்றை அடைப்பில்லாமல் சீர் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். கழிவுநீர்த் தொட்டிகள் எப்போதும் மூடிய நிலையில் வைத்திருக்கப்பட வேண்டும்.

சாலையில் மின்கம்பிகள் விழுந்திருந்தால் அவற்றைத் தொடக்கூடாது. மின்சாதனங்கள், எரிவாயுப் பொருள்கள் பழுதுபட்டிருந்தால் அவற்றைப் பயன்படுத்தக்கூடாது. தற்போது மின்சார வாரியத்தினர் புயல், மழை என்றால் மின்சாரத்தைத் துண்டித்து விடுகின்றனர். புயலின்போது வெளியில் செல்லாமல் இருப்பது சாலச் சிறந்தது. அவசியம் ஏற்பட்டால் மட்டுமே வாகனங்களில் செல்லலாம்.

வெள்ளப் பெருக்கென்றால் வேடிக்கை பார்க்கச் செல்வதைத் தவிர்க்கலாம். இடி மின்னலின்போது மரத்தின்கீழ் நிற்கக் கூடாது. செல்பேசி, வீட்டுச்சாவி, தீப்பெட்டி, மெழுகுவர்த்தி, தண்ணீர்ப் புட்டிகள் முதலிய அவசியமான பொருள்களை ஒரே இடத்தில் வைத்திருக்க வேண்டும். முதலுதவி பெட்டி ஒவ்வொருவர் வீட்டிலும் இருப்பது அவசியம். அவசர உதவிக்கான தொலைபேசி எண்களை அனைவரும் அறிந்திருத்தல் அவசியம்.

**நிலநடுக்கம் :** நிலநடுக்கத்தின் போது அடுக்ககங்களில் இருப்பவர்கள் மின் தூக்கியைப் பயன்படுத்தக்கூடாது. வீட்டை விட்டு வெளியே வந்து வெட்ட வெளியில் நிற்கலாம். மரங்கள், மின்கம்பங்கள் இல்லாத இடமாகப் பார்த்து நிற்க வேண்டும். பாலங்களைக் கடக்கக்கூடாது.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


## கற்பவை கற்றபின்

**1. மக்களைப் பாதிக்கும் இயற்கைச் சீற்றங்களைப் பற்றி எழுதுக.**

(i) **சூறாவளி :** சூறாவளி என்பது கடலில் ஏற்படுகின்ற குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் அல்லது குறைந்த அழுத்த மண்டலமாகும். புயலின் மத்தியில் குறைந்த அழுத்தமும் அதனைச் சுற்றி அதிக அழுத்தமும் உருவாகியிருந்தாலோ, புயலின் மத்தியில் அதிக அழுத்தமும் அதனைச் சுற்றிலும் குறைந்த அழுத்தமும் உருவாகியிருந்தாலோ சூறாவளி உண்டாகும். இது கடற்பகுதியிலிருந்து நிலப்பகுதியைக் கடக்கும்.

(ii) **சுனாமி :** கடலுக்கு அடியில் ஏற்படுகின்ற நிலநடுக்கம் போன்ற மிகப்பெரிய மாறுதல்களால், திடீரென கடல்நீர் மிகப்பெரிய அலைகளாக உருவெடுத்து கரையைச் சேர்ந்து அங்கே பேரழிவுகளை ஏற்படுத்தும். இதனைக் கடற்கோள் என்றும் ஆழிப் பேரலை என்றும் கூறுவர்.

(iii) **பூகம்பம் :** இதனைப் பூமி அதிர்ச்சி அல்லது நிலநடுக்கம் என்று கூறுவர். நிலநடுக்கம் என்பது பூமிக்கடியில் அழுத்தம் அதிகமாகி அதனால் சக்தி வெளியேற்றப்பட்டு தளத்தட்டுகள் நகர்வதனால் இடம்பெறும் அதிர்வைக் குறிக்கும்.

**2. இயற்கைச் சீற்றங்கள் பற்றிய புகைப்படங்களை நாளேடுகளிலிருந்து திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.**

| வெள்ளம் | பூகம்பம் |
|---|---|
|  |  |
| **சுனாமி** | **எரிமலைச் சீற்றம்** |
|  |  |

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக :**

1. இயற்கை மிகவும் <u>அழகானது, அமைதியானது.</u>
2. தமிழ்நாடு அடிக்கடி <u>புயலால்</u> தாக்கப்படும் பகுதியாகும்.
3. பேச்சுத் தமிழில் அமைந்த கும்மிப்பாடல்கள் <u>பஞ்சக்கும்மிகள்</u> என்று அழைக்கப்பட்டன.
4. பஞ்சக்கும்மிகள் என்னும் நூல் <u>புலவர் செ. இராசு</u> என்பவரால் தொகுக்கப்பட்டது.
5. 'காத்து நொண்டிச்சிந்து' இயற்றியவர் <u>வெங்கம்பூர் சாமிநாதன்.</u>

☆ ☆ ☆


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


ஈடில்லா இயற்கை

இயல் 2

# நிலம் பொது

உரைநடை உலகம்

## பாடப் பகுதி

இக்கட்டுரை பக்தவச்சல பாரதி எழுதிய தமிழகப் பழங்குடிகள் எனும் நூலில் இருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ........................ மதிக்கின்றனர். ※

அ) தாயாக ஆ) தந்தையாக
இ) தெய்வமாக ஈ) தூய்மையாக **விடை: அ) தாயாக**

2. 'இன்னோசை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................... .

அ) இன் + ஓசை ஆ) இனி + ஓசை
இ) இனிமை + ஓசை ஈ) இன் + னோசை **விடை: இ) இனிமை + ஓசை**

3. பால் + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........................ .

அ) பால்ஊறும் ஆ) பாலூறும்
இ) பால்லூறும் ஈ) பாஊறும் **விடை: ஆ) பாலூறும்**

### தொடரில் அமைத்து எழுதுக

1. வேடிக்கை – விபத்து நேரிட்டால் வேடிக்கை பார்க்காமல் உதவி செய்ய வேண்டும்.
2. உடன்பிறந்தார் – உற்றார், உறவினர், உடன்பிறந்தார், நண்பர் என அனைவருடனும் பாகுபாடின்றி அன்புடன் பழக வேண்டும்.

### குறுவினா

1. **விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?** ※

**விலைகொடுத்து வாங்க இயலாதவை :**

காற்றின் தூய்மையும் நீரின் உயர்வும் யாருக்கும் சொந்தமானவை அல்ல. எனவே இவற்றை விலை கொடுத்து வாங்க இயலாது.

2. **நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?** அ.மா.வி 2019

**நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு :**

செவ்விந்தியர்கள் நிலத்தைத் தாயாகக் கருதுகிறார்கள். தாய் சேய் உறவு.

3. **எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?**

(i) பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள எருமைகள் கொல்லப்படுவது, எங்குப் பார்த்தாலும் மக்கள் நடமாட்டம் அதிகரித்தல்,

(ii) தொன்மையான மலைகளை மறைத்துத் தொலைபேசிக் கம்பிகள் பெருகி வருதல் ஆகியனவற்றைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

## சிறுவினா

**1. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.**

(i) "ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள், எம்மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவுகூர்பவை.

(ii) இந்த நீரின் முணுமுணுப்புகள் எம் பாட்டன்மார்களின் குரல்கள்.

(iii) இந்த ஆறுகள் யாவும் எம் உடன்பிறந்தவர்கள்.

(iv) இவர்கள்தாம் எமது தாகத்தைத் தீர்க்கிறார்கள். எம்மக்களின் தோணிகளையும் இவர்களே சுமந்து செல்கின்றனர். குழந்தைகளுக்கு உணவளிக்கின்றனர்.

(v) இங்குள்ள ஓடைகளிலும் ஆறுகளிலும் ஓடும் வனப்புமிகு நீரானது வெறும் தண்ணீரன்று; எமது மூதாதையரின் குருதியாகும்" இவ்வாறு சியாட்டல் கூறுகிறார்.

**2. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?**

**சியாட்டல் கூறும் ஒரே குடும்பம் :**

(i) "இந்தப் பூமி எமது மக்களுக்குத் தாயாகும். அதனால் இப்பூமியை எமது மக்கள் எப்பொழுது மறப்பதேயில்லை.

(ii) நாங்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள்; இந்த மண்ணும் எமக்குரியது.

(iii) இங்குள்ள நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எமது சகோதரிகள். மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோதரர்கள்.

(iv) மலை முகடுகள், பசும்புல்வெளிகளின் பனித்துளிகள், மட்டக் குதிரைகளின் உடல் சூட்டின் இதமான கதகதப்பு போன்றவையும் இங்குள்ள மனிதர்கள் எல்லாமும் ஒரே குடும்பம்" என்று சியாட்டல் கூறுகிறார்.

## நெடுவினா

**தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.** ※

**முன்னுரை :**

தாய்மொழி, தாய்நாடு மீது அனைவருக்கும் பற்று இருக்கும். அதன்படி செவ்விந்தியர்கள் தாய்மண் மீது வைத்துள்ள பற்றினைப் பற்றிய சுகுவாமிஷ் பழங்குடியினரின் தலைவரான சியாட்டல் கூறுவதைப் பார்ப்போம்.

**ஒரே குடும்பம் :**

காற்றின் தூய்மையும் நீரின் உயர்வும் அனைவருக்கும் பொதுவானவை. இப்பூமியில் உள்ள ஒவ்வொரு ஊசியிலையும் அனைத்துக் கடற்கரைகளும் கருமரங்களில் தவழும் பனித்துளிகளும் இன்னிசை எழுப்பும் பூச்சி வகைகளும் இவர்களுக்குப் புனிதமானவை. இந்தப் பூமி. எமது மக்களுக்குத் தாயாகும். இங்குள்ள நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எமது சகோதரிகள், மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோதரர்கள். மலைமுகடுகள், பசும்புல்வெளிகளின் பனித்துளிகள், மட்டக் குதிரைகளின் உடல் சூட்டின் இதமான கதகதப்பு போன்றவையும் இங்குள்ள மனிதர்கள் எல்லாமும் ஒரே குடும்பம்.

**நீர்நிலைகள் :**

"ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள், எம்மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவு கூர்பவை. இந்த நீரின் முணுமுணுப்புகள் எம் பாட்டன்மார்களின் குரல்கள். இந்த ஆறுகள் யாவும் எம் உடன்பிறந்தவர்கள். இவர்கள்தாம் எமது தாகத்தைத் தீர்க்கிறார்கள்.

www.Padasalai.Net www.CBSEtips.in

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



எம்மக்களின் தோணிகளையும் இவர்களே சுமந்து செல்கின்றனர். குழந்தைகளுக்கு உணவளிக்கின்றனர். இங்குள்ள ஓடைகளிலும் ஆறுகளிலும் ஓடும் வனப்புமிகு நீரானது வெறும் தண்ணீரன்று; எமது மூதாதையரின் குருதியாகும்."

**தாய் தந்தை :**

இந்தப் பூமியை விலை கொடுத்து வாங்குபவர்கள் அயலவர்கள். இப்பூமி அவர்களின் உடன்பிறந்தார் அன்று. பகைவரே. இதனை வாங்குபவர்கள் வாங்கிய பின் இந்நிலத்தைவிட்டுச் சென்றுவிடுவார்கள். மண்ணை மறந்துவிடுவார்கள். இப்பூமியைப் பாலைவனமாக்கிவிடுவார்கள். ஆனால் செவ்விந்தியர்கள் பூமியைத் தாயாகவும் வானத்தைத் தந்தையாகவும் கருதுவார்கள்.

**முடிவுரை :**

எங்கள் நிலத்தை நாங்கள் நேசிப்பது போலவே நீங்களும் நேசியுங்கள். உங்கள் குழந்தைகளுக்காக இந்நிலத்தைப் போற்றிக் காப்பாற்றுங்கள். நிலத்தை நேசியுங்கள்; இயற்கை நம் எல்லோரையும் நேசிப்பது போல என்று முடிக்கிறார்.

## சிந்தனை வினா

**நிலவளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை?**

**நிலவளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நான் கருதுவன :**

(i) நிலங்களை மண் அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்காக நிறைய மரங்களை வளர்த்தல்.

(ii) ஏரி, குளம், போன்ற நீராதாரங்களைத் தூர்வாரச் செய்து மழைக் காலங்களில் நீரைச் சேமித்தல் மற்றும் அதிகளவில் அணைகளைக் கட்டுதல்.

(iii) ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர்த் தொட்டித் திட்டத்தைக் கட்டாயம் நிறைவேற்றச் செய்வேன்.

(iv) நம் நாட்டின் மண்வளத்திற்கேற்ற புதிய வேளாண்மையைப் பரிந்துரை செய்தல். இயற்கை வேளாண் திட்டத்தைக் கட்டாயப்படுத்துதல்.

(v) நெகிழியைப் பயன்படுத்தாமல் தவிர்த்தல்.

(vi) வீட்டு விலங்குகள், வனவிலங்குகள் அழியாமல் பாதுகாத்தல்.

(vii) செல்பேசி கோபுரங்கள் இல்லாமல் செல்பேசியை இயங்கச் செய்தல்.

(viii) சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்.

## கற்பவை கற்றபின்

1. **நில வளத்தைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய இன்றியமையாப் பணிகளைத் தொகுத்து எழுதுக.**

**நிலவளத்தைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய இன்றியமையாப் பணிகள் :**

(i) நம்மைச் சுற்றியுள்ள இடங்கள் அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

(ii) காடுகள், மலைகள் அழிக்கப்படக்கூடாது.

(iii) வனவிலங்குகள், பறவைகளைப் பாதுகாத்தல்.

(iv) உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் ஒன்றையொன்று சார்ந்து உள்ளதால் அவை அனைத்தையும் பாதுகாத்தல்.

(v) நீர்நிலைகளைக் கோடைக்காலத்தில் தூரெடுத்து வைத்து மழைக் காலத்தில் நீரைத் தேக்கி வைத்தல். அதன் மூலம் நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தவிர்த்தல்.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


(vi) நம் தேவைக்கு மரங்களை வெட்டினாலும் புதிய மரக்கன்றுகளை நட்டு வளர்த்தல்.

(vii) நதிப்படுகைகளில் மரங்களை நடுதல்.

(viii) இயற்கை முறை வேளாண்மையை மேற்கொள்ளுதல்.

**2. தமிழ்நாட்டின் இயற்கை வளங்கள் குறித்த படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.**

| தாமிரபரணி ஆறு | பிச்சாவரம் மாங்குரோவ் காடுகள் | கொல்லி மலை | முதுமலை காடு |
|---|---|---|---|
|  |  |  |  |

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக :**

1. அமெக்காவில் பூஜேசவுண்ட் என்னுமிடத்தைச் சுற்றி வாழ்ந்தவர்கள் __சுகுவாமிஷ்__ பழங்குடியினர்.
2. பூஜேசவுண்ட் சுகுவாமிஷ் பழங்குடியினரின் தலைவராக விளங்கியவர் __சியாட்டல்.__
3. சியாட்டல் __இயற்கை வளங்கள்__ காக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.
4. சியாட்டல் அமெரிக்கக் __குடியரசுத் தலைவருக்குக்__ கடிதம் எழுதினார்.
5. விலை கொடுத்து வாங்க முடியாதவை என சியாட்டல் கூறியவை __காற்றின் தூய்மை, நீரின் உயர்வு.__
6. சுகுவாமிஷ் பழங்குடியினர் __பூமியைத்__ தாயாகவும் __வானத்தைத்__ தந்தையாகவும் கருதக் கூடியவர்கள்.

**பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள், எம் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவுகூர்பவை. இந்த நீரின் முணுமுணுப்புகள் எம் பாட்டன்மார்களின் குரல்களேயாகும். இந்த ஆறுகள் யாவும் எம் உடன்பிறந்தவர்கள். இவர்கள் தாம் எமது தாகத்தைத் தீர்க்கிறார்கள். எம்மக்களின் தோணிகளையும் இவர்களே சுமந்து செல்கின்றனர். குழந்தைகளுக்கு உணவளிக்கின்றனர். இங்குள்ள ஓடைகளிலும், ஆறுகளிலும் ஓடும் வனப்புமிகு நீரானது வெறும் தண்ணீரன்று, எமது மூதாதையரின் குருதியாகும். இந்நிலம் புனிதமானது என்பதை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளுக்கும் இதனைக் கற்றுக்கொடுங்கள்.

**வினாக்கள்.**

1. **செவ்விந்திய மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவுகூர்பவை எவை?**

   ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள், எம் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவுகூர்பவை.

2. **தாகத்தை தீர்ப்பது எவை?**

   ஆறுகள் மக்களின் தாகத்தினை தீர்க்கின்றன.

3. **மூதாதையரின் குருதி என்று செவ்விந்தியர்கள் எவற்றை குறிப்பிட்டனர்?**

   ஓடைகளிலும், ஆறுகளிலும் ஓடும் வனப்புமிகு நீரானது வெறும் தண்ணீரன்று, எமது மூதாதையரின் குருதி என்று செவ்விந்தியர்கள் குறிப்பிட்டனர்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

## குறுவினா :

**1. சுகுவாமிஷ் பழங்குடியினருக்கு எவையெல்லாம் புனிதமானவை?**

சுகுவாமிஷ் பழங்குடியினருக்கு பூமியின் ஒவ்வொரு துகளும் புனிதமானது. கூடவே, மின்னும் ஒளியுடைய ஒவ்வொரு ஊசியிலையும் எல்லாக் கடற்கரைகளும் கருமரங்களில் தவழும் பனித்துளிகளும் இன்னிசை எழுப்பித் திரியும் பூச்சி வகைகளும் நினைவிலும் வாழ்விலும் மிகவும் புனிதமானவை.

**2. சுகுவாமிஷ் பழங்குடியினர் எவற்றையெல்லாம் சகோதர சகோதரிகள் என்று கருதுகின்றனர்?**

சுகுவாமிஷ் பழங்குடியினர், அவர்களுடைய பூமியில் உள்ள நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் தமது சகோதரிகள் என்றும் மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் தமது சகோதரர்கள் என்றும் கருதுகின்றனர்.

**3. சுகுவாமிஷ் பழங்குடியினர் எவற்றையெல்லாம் விரும்புவார்கள்?**

சுகுவாமிஷ் பழங்குடியினர் அமைதியான குளத்தின் முகத்தை முகந்து வரும் தென்றலின் இன்னோசையையும் நடுப்பகலில் பெய்யும் மழையால் எழும் மண்வாசனையையும் தேவதாரு மரத்திலிருந்து பறக்கும் இலைகளின் மணத்தையும் நுகர்வதை விரும்புபவர்கள் என்று சியாட்டல் கூறுகிறார்.

**4. சியாட்டல் குடியரசுத் தலைவருக்கு வைத்த வேண்டுகோள் யாது?**

"நாங்கள் எங்கள் நிலத்தை விற்பதாக இருந்தால் எங்கள் நிலத்தை நாங்கள் நேசிப்பது போலவே நீங்களும் நேசியுங்கள். நாங்கள் எப்படிக் காப்பாற்றி வைத்திருந்தோமோ அப்படியே காப்பாற்றுங்கள். முழுமையான விருப்பத்தோடு உங்கள் குழந்தைகளுக்காக இந்நிலத்தைப் போற்றிக் காப்பாற்றுங்கள். இயற்கை நம் எல்லோரையும் நேசிப்பது போல நிலத்தை நேசியுங்கள்" என்று சியாட்டல் குடியரசுத் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

**5. குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியவையாக சியாட்டல் கூறியது யாது?**

"எங்கள் கால்களைத் தாங்கி நிற்கும் இந்த நிலமானது எம்முடைய பாட்டன்மார்கள் எரிந்த சாம்பலால் ஆனதாகும். இந்நிலமே எங்கள் தாயாகும். எமது உறவுமுறையாரின் வளமான வாழ்வால் ஆனதே இந்நிலமாகும். இதனை நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது போல் உங்கள் குழந்தைகளுக்கும் நீங்கள் சொல்லிக் கொடுங்கள். அப்போதுதான் அவர்கள் இந்நிலத்தை மதிப்பார்கள்." இவையே குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியவை என்று சியாட்டல் கூறினார்.

## சிறுவினா:

**1. அமெரிக்கர்கள், பழங்குடியினரின் நிலத்தை எவ்வாறு மாற்றி விடுவார்கள் என்று சியாட்டல் கூறுகின்றார்?**

**சியாட்டல் கூறுவன :**

(i) "இப்பூமியானது உங்களின் உடன்பிறந்தார் அன்று; பகைவரே. இதனை வென்று கையகப்படுத்தியபின் நீங்கள் வேறு இடத்திற்கு நகர்ந்து விடுங்கள்.

(ii) நீங்கள் உங்கள் தந்தையர்களின் இடுகாடுகளைக்கூட மறந்துவிட்டு வெகுதூரம் சென்றுவிடுவீர்கள். பிறப்புரிமைக்குரிய சொந்த மண்ணையுங்கூட நீங்கள் மறந்துவிடுவீர்கள்.

(iii) நிலத்தை வாங்குவதும் விற்பதும் உங்களுக்கு ஆடுகள் அல்லது மணிகள் விற்பது போன்றவை. உங்களுடைய கோரப் பசியானது இப்பூமியைக் கொன்றழித்துப் பாழாக்கி அதனைப் பாலைவனம் ஆக்கிவிடும். ஆனால் நாங்கள் பூமியைத் தாயாகவும் வானத்தைத் தந்தையாகவும் கருதக்கூடியவர்கள்."

**2. 'நிலமானது கடவுளும் மதிக்கக்கூடிய ஒன்று' – விளக்குக.**

(i) நிலமானது கடவுளும் மதிக்கக்கூடிய ஒன்றாகும். ஆகவே இதற்குக் கெடுதல் செய்வதென்பது அதனைப் படைத்த கடவுளை அவமதிக்கும் செயலாகும்.

(ii) நாம் படுத்துறங்கும் இடத்தை நாமே அசுத்தப்படுத்தினால் ஒருநாள் இரவு நாம் தூக்கியெறிந்த குப்பைகளுக்குள்ளேயே நாம் மூச்சுமுட்டி இறக்க நேரிடும். எனவே நிலத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**3. அமெரிக்க நகரங்களின் காட்சிகளெல்லாம் செவ்விந்தியர்களின் கண்களை எவ்வாறு உறுத்துகின்றன?**

அந்நகரங்களில் அமைதியான இடம் என்று எதுவும் இல்லை. அவர்கள் வாழும் எந்த ஓர் இடத்திலும் அசைந்தாடும் இலைகளின் ஓசைகளையோ பூச்சி இனங்களின் ரீங்காரங்களையோ கேட்க முடிவதில்லை.

மாறாக, சடசடவொலிகள் காதைப் பிளக்கின்றன. மகிழ்வூட்டும் இராக்கூவற் பறவைகளின் ஒலிகளையோ, குளத்தைச் சுற்றிக் கேட்கும் தவளைகளின் கூச்சல்களையோ கேட்க இயலாது.

**4. காற்றின் இன்றியமையாமை குறித்து சியாட்டல் கூறுவன யாவை? (அல்லது) காற்றைப் பற்றி செவ்விந்தியர்களின் கருத்து யாது?**

(i) காற்று மிகவும் மதித்துப் போற்றக்கூடியது. விலங்குகள், மரங்கள், மனிதர்கள் உள்ளிட்ட யாவற்றுக்கும் சுவாசித்தல் பொதுவானது.

(ii) பொதுவான ஒரு காற்றையே இவை யாவும் சுவாசிக்கின்றன.

(iii) இந்தக் காற்றானது அனைத்து உயிர்களையும் காக்கிறது. தாவரங்கள் முதல் மனிதர்கள் வரை அனைவருக்கும் காற்று இன்றியமையாத ஒன்றாகும்.

☆☆☆

ஈடில்லா இயற்கை

# இயல் 2 வெட்டுக்கிளியும் சருகுமானும்

விரிவானம்



## நூல் வெளி

**மனிஷ் சாண்டி, மாதுரி ரமேஷ்** ஆகியோர் காடர்களின் கதைகள் சிலவற்றைத் தொகுத்துள்ளனர். அவற்றை யானையோடு பேசுதல் என்னும் தலைப்பில் வ. கீதா தமிழாக்கம் செய்துள்ளார். அந்நூலில் இருந்து ஒரு கதை இங்குத் தரப்பட்டுள்ளது.

## மதிப்பீடு

**'வெட்டுக்கிளியும் சருகுமானும்', கதையைச் சுருக்கி எழுதுக.** அ.மா.வி 2019

**முன்னுரை :**

தமிழ்நாடு, கேரள மாநிலங்களின் எல்லைக்கு அருகேயுள்ள பரம்பிக்குளம், ஆனைமலை போன்ற பகுதிகளில் காடர்கள் என்னும் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். தமது முன்னோர்களின் வாழ்வை வருங்காலத் தலைமுறையினர் மறந்துவிடக் கூடாது என்று எண்ணினர். எனவே காடுகள், செடிகொடிகள், விலங்குகள் தொடர்பான கதைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கும் பேரன் பேத்திகளுக்கு அவர்கள் சொல்வர். அக்கதைகளுள் ஒன்றைப் பற்றிப் பார்ப்போம்.

**குறிஞ்சிப்புதர் :**

நடுக்காட்டில் ஓடும் ஓடையையுடைய பள்ளத்தாக்கில் பெரிய மரம் ஒன்று விழுந்து கிடந்தது. அதன்மீது பச்சைப்பாசி படர்ந்திருந்தது. பூச்சி புழுக்கள், நத்தைகள் அந்த மரத்தை மொய்த்துக் கொண்டிருக்கும். காட்டு விலங்குகள் நீர் அருந்த அந்த ஓடைக்கு வரும். தாகம் தணிந்ததும் சிறு விலங்குகள் பக்கத்திலுள்ள அடர்ந்த குறிஞ்சிப் புதரில் ஓய்வெடுத்துக் கொள்ளும்.

**வெட்டுக்கிளியும் சருகுமானும் (கூரனும்) :**

குறிஞ்சிப் புதரில் பச்சை வெட்டுக்கிளி ஒன்று வாழ்ந்து வந்தது. அது ஒரு வாயாடி வெட்டுக்கிளி எப்போதும் பேசிக்கொண்டே இருப்பதால் அடிக்கடி சிக்கல்களில் மாட்டிக் கொள்ளும். கூரன் என்ற சருகுமான் சிறிய பிராணி, கூச்சப்படும் விலங்கு. அதனால் வெட்டுக்கிளி பயப்படவில்லை. கூரன் குறிஞ்சிப் புதர் அருகே இளைப்பாற வந்தது.

**ஓடி ஒளிந்த கூரன் :**

கூரனைப் பார்த்த வெட்டுக்கிளி, "இவ்வளவு நாட்கள் எங்கே இருந்தாய்? ஏன் இங்கும் அங்கும் வேகமாய் ஓடுகிறாய்?" என்று கேட்டது. கூரன், "காட்டின் அந்தக்கோடியில் இருந்தேன். உன்னிடம் பேச நேரமில்லை. பித்தக்கண்ணு என்னைத் துரத்துகிறது" என்று கூறிவிட்டு அம்மரத்தடியில் ஒளிந்து கொண்டது. வெட்டுக்கிளியிடம், "நீ பித்தக்கண்ணுவிடம் நான் இங்கு இருப்பதைச் சொல்லிவிடாதே. என்னைப் பார்த்துவிட்டால் பிடித்து ஒரே வாயில் விழுங்கிவிடும்..." என்றது. பித்தக்கண்ணு என்பது பெரிய, மஞ்சள் நிற கண்களை உடைய சிறுத்தையாகும்.

**வெட்டுக்கிளியின் செயல் :**

பித்தக்கண்ணுவைப் பக்கத்தில் பார்ப்பது வெட்டுக்கிளிக்கு இதுதான் முதல்முறை. உற்சாக மிகுதியால் பதில் சொல்ல எண்ணிய பொழுது கூரனுக்கு அளித்திருந்த வாக்குறுதி நினைவுக்கு வந்ததால் வாயை மூடிக் கொண்டது. ஆனால் தன்னை அறியாமல் கூரன் ஒளிந்திருந்த இடத்தருகே குதித்துக் குதித்துச் சென்றது.

**பித்தக்கண்ணுவின் ஏமாற்றம் :**

வெட்டுக்கிளியின் ஆட்டத்திற்கான பொருளை உணர்ந்த பித்தக்கண்ணு, கூரன் பதுங்கிக் கிடந்த மரத்தடிப்பக்கம் சென்று மோப்பமிட்டது. நல்ல வேளையாக முதல்நாள் இரவுதான் அந்த மரத்தடியில் புனுகுப் பூனை ஒன்று தங்கியிருந்தது. அது தங்கிய இடம் மிகவும் நாறும். அதனால் கூரனின் உடல்வாடை பித்தக்கண்ணுவின் மூக்குக்கு எட்டவில்லை. மாறாக புனுகுப்பூனையின் துர்நாற்றமே எட்டியது. பித்தக்கண்ணு சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கிடைக்காததால் அங்கிருந்து கிளம்பிச் சென்றது.

**கூரனின் மிரட்டல் :**

கூரன் வெளியே வந்தது. தன் மறைவிடத்தைக் காட்டிக் கொடுத்த வெட்டுக்கிளிக்குப் பாடம் கற்பிக்க எண்ணியது. "முட்டாள்! பித்தக்கண்ணு முன் அப்படிக் குதியாட்டம் போடாவிட்டால் என்ன? நான் இன்று செத்துப் பிழைத்திருக்கிறேன். அது என்னைத் தன் பெரிய வாய்க்குள் திணித்துத் தின்னாமல் விட்டது அதிசயம்தான்" என்று கத்தியது. "இனி இப்படிச் செய்தால், திரும்பி வந்து உன்னை என் தங்கக் கால்களால் மிதித்து நசுக்கி விடுவேன்" என்று வெட்டுக்கிளியைக் கூரன் மிரட்டிக் கொண்டே தனது கூர்மையான பாதங்களை மண்ணின் மீது அழுத்தி எகிறிக் குதித்தது. தன் கோபப் பார்வையை வீசிவிட்டுக் காட்டுக்குள் ஓடியது.

**முடிவுரை :**

அன்றிலிருந்து கூரனின் கூர்பாதங்கள் எங்கே தன்மீது பட்டுவிடுமோ என்று வெட்டுக்கிளி அச்சத்துடன் வாழ்ந்து வருகிறது. இதனால்தான் இன்றும்கூட வெட்டுக்கிளிகள் ஓர் இடத்தில் நிலைத்து இருக்க முடியாமல் குதித்த வண்ணமுள்ளன. ஆனாலும் அவை எந்தத் திசையை நோக்கியும் குதிப்பதில்லை.



www.surabooks.com

## கற்பவை கற்றபின்

**'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையை நாடகமாக நடித்துக் காட்டுக.**

**இடம் :** குறிஞ்சி புதர்

**கதாபாத்திரங்கள் :** வெட்டுக்கிளி, சருகுமான்

(குறிஞ்சிப் புதரின் தாழப் படர்ந்திருந்த கிளையில் வெட்டுக்கிளி ஒன்று வசித்து வந்தது. அங்கு வந்த கூரன் என்ற சருகுமானிடம் வெட்டுக்கிளி பேசியது...)

**காட்சி – 1**

**வெட்டுக்கிளி** : "என்ன கூரன், பார்த்து வெகுநாள் ஆயிற்று! இவ்வளவு நாட்கள் எங்கே போயிருந்தாய்? ஏன் இங்கும் அங்கும் வேகமாக ஓடுகிறாய்?"

**சருகுமான்** : காட்டின் அந்தக் கோடியில் இருந்தேன். இப்பொழுது உன்னிடம் பேச எனக்கு நேரமில்லை. பித்தக்கண்ணு என்னைத் துரத்திக் கொண்டு வருகிறது. நான் எங்காவது ஒளிய வேண்டும். எனக்குச் சோர்வாக வேறு இருக்கிறது. பல மணி நேரமாக ஓடி ஓடிக் களைத்துப் போய்விட்டேன்.

(சிறுத்தை துரத்திக் கொண்டு வருவதால் கூரன் மரக்கிளைக்கு அடியில் ஒளிந்து கொண்டு வெட்டுக்கிளியை எச்சரித்தது.)

**சருகுமான்** : வெட்டுக்கிளியே! நீ வளவளவென்று பேசக்கூடிய ஆள். பித்தக்கண்ணு உன்னிடம் என்னைப் பற்றிக் கேட்டால் வாயைத் திறந்து எதையும் சொல்லிவிடாதே. அது என்னைப் பார்த்துவிட்டால் பிடித்து ஒரே வாயில் விழுங்கிவிடும்.

**காட்சி – 2**

(பித்தக்கண்ணு சத்தமில்லாமல் மரக்கிளைக்கு அருகில் வந்து சேர்ந்தது.)

**பித்தக்கண்ணு** : கூரன் இங்கு வந்தாளா? அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா?

வெட்டுக்கிளி பதில் கூறவில்லை. ஆனால் கூரன் ஒளிந்திருந்த இடத்தருகே குதித்துக் குதித்துச் சென்றது. பித்தக்கண்ணு வெட்டுக்கிளியின் செய்கையால் கூரன் ஒளிந்திருந்த மரத்தடிப் பக்கம் சென்று மோப்பமிட்டது. மோப்பம் பிடித்தபடி சுற்றி வந்தது. அதற்குக் கூரனின் உடல்வாடை தெரியவில்லை. முதல் நாள் இரவு அந்த மரத்தடியில் தங்கியிருந்த புனுகுப்பூனையின் துர்நாற்றமே எட்டியது. எனவே அது அந்த இடத்தைவிட்டு வேறு பக்கம் சென்றது.

(கூரன் தன்னைக் காட்டிக் கொடுக்க எண்ணிய வெட்டுக்கிளியை மிரட்ட வேண்டும் என்று எண்ணியபடி வெளியே வந்தது.)

**கூரன்** : "முட்டாள்! பித்தக்கண்ணு முன் அப்படிக் குதியாட்டம் போடாவிட்டால் என்ன? நான் இன்று செத்துப் பிழைத்திருக்கிறேன். அது என்னைத் தன் பெரிய வாய்க்குள் திணித்துத் திங்காமல் விட்டது அதிசயம்தான். இனி இப்படிச் செய்தால், திரும்பி வந்து உன்னை என் தங்கக் கால்களால் மிதித்து நசுக்கிவிடுவேன்."

(சொல்லிக் கொண்டே கூரன் தன் கூர்மையான பாதங்களை மண்ணின் மீது அழுத்தி எகிறிக் குதித்தது. குறிஞ்சிப்புதர் ஆடியதில் வெட்டுக்கிளி கீழே விழப்போனது. கூரன் காட்டுக்குள் ஓடியது. அன்றிலிருந்து வெட்டுக்கிளி அச்சத்துடன் வாழ்ந்து வருகிறது.)

☆ ☆ ☆





www.surabooks.com

வாழ்வியல்

இயல் 2

# திருக்குறள்

## நூல் வெளி



பெருநாவலர், முதற்பாவலர், நாயனார் முதலிய பல சிறப்புப் பெயர்களால் குறிக்கப்படும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பர்.

திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல் ஆகும். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. அறத்துப்பால் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களைக் கொண்டது. பொருட்பால் அரசியல், அமைச்சியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என்னும் இரண்டு இயல்களைக் கொண்டது.

### நடுவுநிலைமை

1. **தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தால் காணப் படும்.***

**தெளிவுரை** : நடுவு நிலைமை உடையவர், நடுவு நிலைமை இல்லாதவர் என்பது அவரவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழினாலும் பழியினாலும் அறியப்படும்.

2. **சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி.**

**தெளிவுரை** : தான் சமமாக இருந்து தன்னிடம் வைக்கப்படும் பொருள்களின் எடையைத் துலாக்கோல் சரியாகக் காட்டும். அதுபோல நடுவு நிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும்.

**அணி** : உவமை அணி.

### கூடா ஒழுக்கம்

3. **வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**
**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.**

**தெளிவுரை** : மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக்கொண்ட பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது.

**அணி** : இல்பொருள் உவமை அணி.

4. **கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன**
**வினைபடு பாலால் கொளல்.***

**தெளிவுரை** : நேராக இருந்தாலும் அம்பு கொடியதாக இருக்கிறது. வளைவுடன் இருப்பினும் யாழின் கொம்பு இனிமையைத் தருகிறது. அதுபோல மக்களின் பண்புகளை அவரவர் தோற்றத்தால் அல்லாமல் செயல் வகையால் உணர்ந்துகொள்ள வேண்டும்.

### கல்லாமை

5. **உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
**களர்அனையர் கல்லா தவர்.**

**தெளிவுரை** : கல்லாதவர் பயனில்லாத களர்நிலம் போன்றவர். அவர் உயிரோடு இருக்கிறார் என்பதைத் தவிர அவரால் வேறு எந்தப் பயனும் இல்லை.

6. **விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர்.***

தெளிவுரை : கற்றவர்க்கும் கல்லாதவருக்கும் இடையே உள்ள வேறுபாடானது, மக்களுக்கும் விலங்குகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டிற்கு இணையானது.

### குற்றங்கடிதல்

7. **வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும்.**

தெளிவுரை : பழிவருமுன்னே சிந்தித்து தம்மைக் காத்துக் கொள்ளாதவருடைய வாழ்க்கை, நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல்போர் போல அழிந்து விடும்.

அணி : உவமை அணி.

8. **தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்**
**என்குற்றம் ஆகும் இறைக்கு.***

தெளிவுரை : தலைவர் முதலில் தன்குற்றத்தைக் கண்டு நீக்கி, அதன்பின் பிறருடைய குற்றத்தை ஆராய்ந்தால், அவருக்கு எந்தப் பழியும் ஏற்படாது.

### இடனறிதல்

9. **தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**
**இடங்கண்ட பின்அல் லது.**

தெளிவுரை : பொருத்தமான இடத்தை அறியாமல் எந்தச் செயலையும், தொடங்கவும் கூடாது; இகழவும் கூடாது.

10. **கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்**
**நாவாயும் ஓடா நிலத்து.**

தெளிவுரை : வலிமையான சக்கரங்களைக் கொண்ட பெரியதேர் கடலில் ஓட இயலாது. கடலில் ஓடும் கப்பல் தரையில் ஓட இயலாது. அவரவர் தமக்குரிய இடங்களிலேயே சிறப்பாகச் செயல்பட முடியும்.

அணி : பிறிது மொழிதல் அணி.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **புகழாலும் பழியாலும் அறியப்படுவது ................... .**
அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை
இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை
விடை: **இ) நடுவுநிலைமை**

2. **பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ........................**
அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர்
இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
விடை: **ஆ) கல்லாதவர்**

3. **'வல்லுருவம்' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................... .**
அ) வல் + உருவம் ஆ) வன்மை + உருவம்
இ) வல்ல + உருவம் ஈ) வல்லு + உருவம்
விடை: **ஆ) வன்மை + உருவம்**

**4. நெடுமை + தேர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .................. .**

அ) நெடுநேர் ஆ) நெடுத்தேர்
இ) நெடுந்தேர் ஈ) நெடுமைதேர் **விடை: இ) நெடுந்தேர்**

**5. 'வருமுன்னர்' - எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி .................. .**

அ) எடுத்துக்காட்டு உவமை அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி
இ) உவமை அணி ஈ) உருவக அணி **விடை: இ) உவமை அணி**

## குறுவினா

**1. சான்றோர்க்கு அழகாவது எது?**

தான் சமமாக இருந்து தன்னிடம் வைக்கப்படும் பொருள்களின் எடையைத் துலாக்கோல் சரியாகக் காட்டும். அதுபோல நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும்.

**2. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?**

தலைவர் முதலில் தன் குற்றத்தைக் கண்டு நீக்கி, அதன்பின் பிறருடைய குற்றத்தை ஆராய்ந்தால், அவருக்கு எந்தப் பழியும் ஏற்படாது.

**3. 'புலித் தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?**

மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக் கொண்ட பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது.

## திருக்குறளைச் சீர்பிரித்து எழுதுக

**1. தக்கார் தகவிர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்.**

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

**2. தொடங்கற்க எவ்வினையு மெள்ளற்க முற்று மிடங்கண்ட பின் அல்லது.**

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க
இடங்கண்ட பின்அல் லது.

## கோடிட்ட இடத்தை நிரப்புக

1. வலியில் நிலைமையான் வல்லுருவம் .........
புலியின்தோல் ........... மேய்ந் தற்று. **விடை: பெற்றம், போர்த்து**

2. விலங்கொடு ............. அனையர் .....................
கற்றாரோடு ஏனை யவர். **விடை: மக்கள், இலங்குநூல்**

## சீர்களை முறைப்படுத்தி எழுதுக

**யாழ்கோடு அன்ன கொளல் கணைகொடிது
வினைபடு பாலால் செவ்விதுஆங்கு.**

கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.

சுவைமிகு இயற்றமிழ்


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


**படங்களுக்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக**



1. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.



2. கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. **திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் ................ .**
அ) புறநானூறு ஆ) கலித்தொகை
இ) திருவள்ளுவமாலை ஈ) பரிபாடல் **விடை: இ) திருவள்ளுவமாலை**

2. **கடல் ஓடா எனத்தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ................ .**
அ) தற்குறிப்பேற்ற அணி ஆ) உவமை அணி
இ) உருவக அணி ஈ) பிறிது மொழிதல் அணி **விடை: இ)பிறிது மொழிதல் அணி**

**நிரப்புக:**

1. திருவள்ளுவர் **இரண்டாயிரம்** ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பர்.
2. திருக்குறளில் உள்ள முப்பால் **அறம், பொருள், இன்பம்.**
3. அறத்துப்பால் **நான்கு** இயல்களைக் கொண்டது.
4. பொருட்பால் **மூன்று** இயல்களைக் கொண்டது.
5. இன்பத்துப்பால் **இரண்டு** இயல்களைக் கொண்டது.
6. நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே **சான்றோர்க்கு** அழகாகும்.
7. புலித்தோல் போர்த்திய பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது மனத்தை அடக்க இயலாதவரின் வலிய **தவக்கோலம்.**
8. வளைவுடன் இருப்பினும் **யாழின்** கொம்பு இனிமையைத் தரும்.
9. நேராக இருந்தாலும் **அம்பு** கொடியதாக இருக்கும்.
10. அவரவர் தமக்குரிய இடங்களிலேயே **சிறப்பாகச்** செயல்பட முடியும்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

## அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (3 × 1 = 3)

1. செஞ்சொல் மாதரின் வள்ளைப் பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ....................
அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு

2. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ...................... மதிக்கின்றனர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

3. 'வல்லுருவம்' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................. .
அ) வல் + உருவம் ஆ) வன்மை + உருவம்
இ) வல்ல + உருவம் ஈ) வல்லு + உருவம்

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக. (3 × 1 = 3)

4. வாணிதாசனுக்குப் பிரெஞ்சு அரசு .............. விருது வழங்கியுள்ளது.
5. பேச்சுத் தமிழில் அமைந்த கும்மிப்பாடல்கள் .............. என்று அழைக்கப்பட்டன.
6. பாடினான் என்பது ............. வினைமுற்று.

### III. வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக (4 × ½ = 2)

7. நடக்கிறது –
8. போனான் –
9. சென்றனர் –
10. உறங்கினாள் –

### IV. கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக (2 × ½ = 1)

11. பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே! –
12. நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? –

### V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும். (3 × 2 = 6)

13. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
14. புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?
15. விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
16. வியங்கோள் வினைமுற்று எவ்வெவற்றைக் காட்டும்?

### VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும். (2 × 3 = 6)

17. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?
18. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.
19. தேர், கப்பல் மூலம் வள்ளுவர் கூறும் கருத்து யாது?

### VII. அடிமாறாமல் எழுதுக. [4]

20. 'தக்கார்' எனத்தொடங்கும் மற்றும் 'கொளல்' என முடியும் திருக்குறள்களை எழுதுக.

☆ ☆ ☆



www.surabooks.com
பாடசாலை

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


பாருக்குள்ளே நல்ல நாடு

இயல் 7

# விடுதலைத் திருநாள்

கவிதைப்பேழை

## ஆசிரியர் குறிப்பு



**ஆசிரியர்** : மீரா

**இயற்பெயர்** : மீ.இராசேந்திரன்

**பணி** : கல்லூரி பேராசிரியர்

**எழுதிய நூல்கள்** : ஊசிகள், குக்கூ, மூன்றும் ஆறும், வா இந்தப் பக்கம்.

**நடத்திய இதழ்** : அன்னம் விடு தூது

**பாடப்பகுதி** : மீரா எழுதிய **கோடையும் வசந்தமும்** என்னும் நூலிலிருந்து ஒரு கவிதை இங்குத் தரப்பட்டுள்ளது.

## பாடல்

முன்னூறு வருடமாய்
முற்றுகை யிட்ட
அந்நிய இருட்டின்
அரக்கக் கூத்து
முடிந்தது என்று
முழங்கி நின்றது
எந்த நாளோ
அந்த நாள் இது.

செத்த பிணமாய்ச்
சீவனில் லாமல்
மொத்தமாய்த் தேசத்தை
முற்றுகையிட்ட
மூட மூட
நிர் மூட உறக்கத்தை
ஓட ஓட
விரட்டி யடித்து
விழிக்க வைத்தது–
வையம்
வியக்க வைத்தது –
எந்த நாளோ
அந்த நாள் இது.

பரிதவித் திருந்த
பாரத அன்னை
காளியாய்ச் சீறிக்
கைவிலங் கொடித்து
பகையைத் துடைத்து
சத்திய நெஞ்சின்
சபதம் முடித்து
கூந்தல் முடித்துக்
குங்குமப் பொட்டு வைத்து
ஆனந்த தரிசனம்
அளித்து நின்றது
எந்த நாளோ
அந்த நாள் இது.

சதி வழக்கினிலே
சம்பந்தப் பட்டுத்
தூக்குக் கயிற்றில்
தொங்கப் போகும்
கடைசிக் கணத்திலும்
கண்முன் நிறுத்திப்
பகத்சிங் பார்த்துப்
பரவசப் பட்ட

அற்புத விடியலை
அழைத்து வந்தது
எந்த நாளோ
அந்த நாள் இது.

முற்றிப் படர்ந்த
முட்காட்டை எரித்து
விளைந்த மூங்கிலை
வீரமாய்த் துளைத்து
மூச்சுக் காற்றை
மோகித்து நுழைத்து
புரட்சிப்
புல்லாங் குழலில்
பூபாளம் இசைத்தது
எந்த நாளோ
அந்த நாள் இது.



இதந்தரும் இந்தச்
சுதந்திர நாளைச்
சொந்தம் கொண்டாடத்
தந்த பூமியைத்
தமிழால் வணங்குவோம்.

– மீரா


www.surabooks.com

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| 1. சீவன் – உயிர் | 4. வையம் – உலகம் |
| 2. சத்தியம் – உண்மை | 5. சபதம் – சூளுரை |
| 3. ஆனந்த தரிசனம் – மகிழ்வான காட்சி | 6. மோகித்து – விரும்பி |

## பொருளுரை

முந்நூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட அரக்கராகிய அந்நியரின் இருண்ட ஆட்சி முடிந்தது என்பதைக் கூறும் நாள் இன்று. உயிரற்ற பிணங்களைப் போலக் கிடந்த நாட்டு மக்கள் அனைவரையும் பற்றியிருந்த அறியாமை என்னும் உறக்கத்தை ஓட ஓட விரட்டிய நாள் இன்று.

அடிமையாய்த் தவித்துக் கொண்டிருந்த இந்தியத் தாய் சினந்து எழுந்து தன் கைவிலங்கை உடைத்துப் பகைவரை அழித்து, அவிழ்ந்த கூந்தலை முடித்து நெற்றியில் திலகமிட்டு, இந்தியருக்கு மகிழ்வான காட்சியை அளித்த நாள் இன்று.

சதி வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பகத்சிங், தூக்கிலிடப்படும் கடைசி நேரத்திலும் தன் மனக்கண்ணில் கனவுகண்ட இந்தியாவின் விடியல் தோன்றிய நாள் இன்று. பகைமை என்னும் முள்காட்டினை அழித்து, அங்கு விளைந்த மூங்கிலைப் புரட்சி என்னும் புல்லாங்குழல் ஆக்கி மூச்சுக்காற்றால் பூபாள இசை பாடும் இனிய நாள் இன்று.

இன்பம் தரும் இந்த விடுதலைத் திருநாளைக் கொண்டாட வாய்ப்பளித்த நம் தாய்நாட்டைத் தமிழால் வணங்குவோம்.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **வானில் முழுநிலவு அழகாகத் .................... அளித்தது.**
அ) தயவு ஆ) தரிசனம் இ) துணிவு ஈ) தயக்கம் **விடை: ஆ) தரிசனம்**

2. **இந்த .................. முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.**
அ) வையம் ஆ) வானம் இ) ஆழி ஈ) கானகம் **விடை: அ) வையம்**

3. **'சீவனில்லாமல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............**
அ) சீவ + நில்லாமல் ஆ) சீவன் + நில்லாமல்
இ) சீவன் + இல்லாமல் ஈ) சீவ + இல்லாமல் **விடை: இ) சீவன் + இல்லாமல்**

4. **'விலங்கொடித்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................**
அ) விலம் + கொடித்து ஆ) விலம் + ஒடித்து
இ) விலன் + ஒடித்து ஈ) விலங்கு + ஒடித்து **விடை: ஈ) விலங்கு + ஒடித்து**

5. **காட்டை + எரித்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..............**
அ) காட்டைஎரித்து ஆ) காட்டையெரித்து
இ) காடுஎரித்து ஈ) காடுயெரித்து **விடை: ஆ) காட்டையெரித்து**

6. **இதம் + தரும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..............**
அ) இதந்தரும் ஆ) இதம்தரும்
இ) இதத்தரும் ஈ) இதைத்தரும் **விடை: அ) இதந்தரும்**

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


## குறுவினா

1. **பகத்சிங் கண்ட கனவு யாது?**

   இந்தியா அந்நியரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதே பகத்சிங் கண்ட கனவு ஆகும்.

2. **இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?**

   முந்நூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட அரக்கராகிய அந்நியரின் ஆட்சியை இருண்ட ஆட்சி என மீரா குறிப்பிடுகிறார்.

## சிறுவினா

**இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?**

(i) முந்நூறு ஆண்டுகள் அந்நியரின் இருண்ட ஆட்சி முடிந்தது. உயிரற்ற பிணங்களைப் போலக் கிடந்த நாட்டு மக்கள் அனைவரையும் பற்றியிருந்த அறியாமை என்னும் உறக்கத்தை ஓட ஓட விரட்டினோம்.

(ii) அடிமையாய்த் தவித்துக் கொண்டிருந்த இந்தியத்தாய் சினந்து எழுந்து தன் கைவிலங்கை உடைத்துப் பகைவரை அழித்து, அவிழ்ந்த கூந்தலை முடித்து நெற்றியில் திலகமிட்டு இந்தியருக்கு மகிழ்வான காட்சியை அளிக்கின்றாள்.

## சிந்தனை வினா

**நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையில் விடுதலை நாளை எவ்வாறு கொண்டாடலாம்?**

(i) நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையில் விடுதலை நாள் விழாவில் பல கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்த வேண்டும்.

(ii) நம்மைப் பெற்றெடுத்த தாயை எவ்வாறு போற்றுவோமோ, அதேபோல் நம் தாய்நாட்டின் பெருமையையும் பழமையையும் மாணவர்கள் அறியும்படி உரையாற்ற வேண்டும்.

(iii) நாம் அடிமைகளாய் இருந்ததைக் கூறி அடிமைத்தளையை நீக்கியவர்களின் தியாகத்தைக் கூறும் வகையில் சிறு நாடகம் நடத்த வேண்டும்.

(iv) சாதி, மத பேதங்களினால் நாம் சண்டை சச்சரவுகளில் ஈடுபடாமல் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.

(v) நாட்டின் பாரம்பரியம் கலாச்சாரத்தை மதித்து நடக்க வேண்டும். தேசிய சின்னங்கள், தேசியக் கொடி, தேசியப்பாடல் ஆகியவற்றிற்கு மதிப்பளிக்க வேண்டும். நாட்டிற்குச் சேவை செய்ய எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும். ஊர்க்காவல் படை, மாணவர் தேசியப்படை ஆகியவற்றில் பங்காற்றல் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு விடுதலை நாளைக் கொண்டாடலாம்.

## கற்பவை கற்றபின்

**நீங்கள் விரும்பும் விழா ஒன்றனைப் பற்றி ஒரு பத்தி அளவில் எழுதுக.**

நான் விரும்பும் விழா குடியரசு நாள் விழா.

குடியரசு நாள் அன்று பள்ளியில் கொடியேற்றுவார்கள். நான் காலையில் பள்ளிக்குச் செல்வேன். பள்ளியில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளைக் கண்டுகளிப்பேன். விழாத் தலைவர், பள்ளி முதல்வர் மற்றும் என் நண்பர்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆற்றும் உரையைக் கேட்பேன்.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

பிறகு விழா முடிவில் நாட்டுப்பண் பாடியதும் இனிப்புகள் வழங்கப்படும். இனிப்புகளைப் பெற்றுக் கெண்டு வீட்டிற்குச் சென்று தொலைக்காட்சியில் மாநில ஆளுநர் கொடியேற்றுவதையும் மெரினா கடற்கரை சாலையில் காவல்துறையினரின் அணிவகுப்பையும் கலை நிகழ்ச்சிகளையும் கண்டு களிப்பேன். அந்நன்னாளில் வீரதீர செயல்கள் செய்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்படும். இந்நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு அன்று மாலை மெரினா கடற்கரைக்குச் சென்று நீரில் விளையாடிவிட்டு வருவேன். இக்காரணங்களால் எனக்குக் குடியரசு நாள் மிகவும் பிடிக்கும்.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக :

1. கவிஞர் மீராவின் இயற்பெயர் <u>மீ.இராசேந்திரன்.</u>
2. மீரா அவர்கள் நடத்திய இதழ் <u>அன்னம் விடு தூது.</u>
3. விடுதலைத் திருநாள் என்ற பாடல் <u>கோடையும் வசந்தமும்</u> என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.
4. தாய்நாட்டைத் <u>தமிழால்</u> வணங்குவோம்.
5. பகத்சிங்கிற்கு சதி வழக்கில் <u>தூக்குத்தண்டனை</u> விதிக்கப்பட்டது.

### குறுவினா :

**1. மீரா – குறிப்பு வரைக.**

(i) கவிஞர் மீரா அவர்களின் இயற்பெயர் மீ.இராசேந்திரன். இவர் கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

(ii) அன்னம் விடு தூது என்னும் இதழை நடத்தியவர்.

(iii) ஊசிகள், குக்கூ, மூன்றும் ஆறும், வா இந்தப் பக்கம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

**2. அந்நியர் ஆட்சியில் மக்கள் எவ்வாறு இருந்தனர்?**

முந்நூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட அரக்கராகிய அந்நியரின் இருண்ட ஆட்சியில் மக்கள் உயிரற்ற பிணங்களைப் போலக் கிடந்தனர்.

### நெடுவினா :

**'விடுதலைத் திருநாள்' பாடல் மூலம் கவிஞர் கூறியவற்றைத் தொகுத்து எழுதுக.**

(i) முந்நூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட அரக்கராகிய அந்நியரின் இருண்ட ஆட்சி முடிந்தது என்பதைக் கூறும் நாள் இன்று.

(ii) உயிரற்ற பிணங்களைப் போலக் கிடந்த நாட்டு மக்கள் அனைவரையும் பற்றியிருந்த அறியாமை என்னும் உறக்கத்தை ஓட ஓட விரட்டிய நாள் இன்று.

(iii) அடிமையாய்த் தவித்துக் கொண்டிருந்த இந்தியத் தாய் சினந்து எழுந்து தன் கைவிலங்கை உடைத்துப் பகைவரை அழித்து, அவிழ்ந்த கூந்தலை முடித்து நெற்றியில் திலகமிட்டு, இந்தியருக்கு மகிழ்வான காட்சியை அளித்த நாள் இன்று.

(iv) சதி வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பகத்சிங், தூக்கிலிடப்படும் கடைசி நேரத்திலும் தன் மனக்கண்ணில் கனவுகண்ட இந்தியாவின் விடியல் தோன்றிய நாள் இன்று.

(v) பகைமை என்னும் முள்காட்டினை அழித்து, அங்கு விளைந்த மூங்கிலைப் புரட்சி என்னும் புல்லாங்குழல் ஆக்கி மூச்சுக்காற்றால் பூபாள இசை பாடும் இனிய நாள் இன்று.

(vi) இன்பம் தரும் இந்த விடுதலைத் திருநாளைக் கொண்டாட வாய்ப்பளித்த நம் தாய்நாட்டை தமிழால் வணங்குவோம்.

☆ ☆ ☆



www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

8 ஆம் வகுப்பு

தேர்வு எண்

# ஆண்டுப் பொதுத்தேர்வு - 2022

## தமிழ் (விடைகளுடன்)

நேரம் : 2.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** (14 × 1 = 14)

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல்.............
   (அ) வைப்பு (ஆ) கடல்
   (இ) பரவை (ஈ) ஆழி

2. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து .............என அழைக்கப்படுகிறது.
   (அ) கோட்டெழுத்து (ஆ) வட்டெழுத்து
   (இ) சித்திர எழுத்து (ஈ) ஓவிய எழுத்து

3. பள்ளிக்குச் சென்று கல்வி ............. சிறப்பு
   (அ) பயிலுதல் (ஆ) பார்த்தல்
   (இ) கேட்டல் (ஈ) பாடுதல்

4. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று .............
   (அ) தலைவலி (ஆ) காய்ச்சல்
   (இ) புற்றுநோய் (ஈ) இரத்தக்கொதிப்பு

5. கற்றவருக்கு அழகு தருவது .............
   (அ) தங்கம் (ஆ) வெள்ளி
   (இ) வைரம் (ஈ) கல்வி

6. அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் ............. க் கண்டு அஞ்சமாட்டார்கள்.
   (அ) புலனை (ஆ) அறனை
   (இ) நமனை (ஈ) பலனை

7. வறுமை வந்த காலத்தில் ............. குறையாமல் வாழ வேண்டும்.
   (அ) இன்பம் (ஆ) தூக்கம்
   (இ) ஊக்கம் (ஈ) ஏக்கம்

8. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் .............
   (அ) இராதாகிருட்டிணன் (ஆ) அம்பேத்கர்
   (இ) நௌரோஜி (ஈ) ஜவஹர்லால் நேரு

9. இடம் + எங்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............
   (அ) இடவெங்கும் (ஆ) இடம் எங்கும்
   (இ) இடமெங்கும் (ஈ) இடம்மெங்கும்

10. 'விலங்கொடித்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............
   (அ) விலம் + கொடித்து
   (ஆ) விலம் + ஒடித்து
   (இ) விலன் + ஒடித்து
   (ஈ) விலங்கு + ஒடித்து

**ஆ) பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 11. | மட்பாண்டம் | – | தோன்றல் விகாரம் |
| 12. | மரவேர் | – | இயல்புப் புணர்ச்சி |
| 13. | மணிமுடி | – | கெடுதல் விகாரம் |
| 14. | கடைத்தெரு | – | திரிதல் விகாரம் |

**II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** (6 × 2 = 12)

15. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
16. ஓடை எவ்வாறு ஒடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
17. நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?
18. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாக சுந்தரர் கூறுவன யாவை?
19. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
20. பகத்சிங் கண்ட கனவு யாது?
21. எம்.ஜி.ஆர் நாடகத் துறையில் ஈடுபடக் காரணம் என்ன?
22. அரசன் தண்டிக்கும் முறை யாது?
23. எவற்றையெல்லாம் கைவினைக் கலைகள் எனக் கூறுகிறோம்?

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.** (3 × 2 = 6)

24. இயல்புப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக?
25. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
26. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
27. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
28. மெய் எழுத்துக்கள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
29. சந்திப்பிழை என்றால் என்ன?

**IV. அடிபிறழாமல் எழுதுக.** (4 + 2 + 2 = 8)

30. "வாழ்க நிரந்தரம்" – எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை எழுதுக.
31. "விலங்கொடு" – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
32. தொடர்பு – என முடியும் திருக்குறளை எழுதுக.

**V. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** (4 × 4 = 16)

33. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



34. இந்தியத் தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?
35. கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.
36. கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.
37. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர் ஆற்றிய பணிகள் யாவை?
38. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் யாவை?
39. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடைஅளி.** (2 × 6 = 12)

40. (அ) பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?

(அல்லது)

(ஆ) ஐம்பொறிகளைக் கொண்டு நாம் செய்ய வேண்டிய நற்செயல்கள் யாவை?

41. (அ) எம்.ஜி.ஆரின் பண்புநலன்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**VII. எவையேனும் ஒன்று மட்டும் விடைஅளி.** (1 × 8 = 8)

42. (அ) அறிவுசால் ஔவையார் – என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

(அல்லது)

(ஆ) காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**VIII. கட்டுரை (ஒன்று மட்டும் விடைஅளி)** (1 × 8 = 8)

43. (அ) நூலகம் (அல்லது) (ஆ) உழைப்பே உயர்வு
44. கடிதம் (ஒன்று மட்டும் விடையளி) (1 × 8 = 8)

(அ) புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

(ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

**IX. அனைத்து வினாக்களுக்கும் விடைஅளி.** (8 × 1 = 8)

45. நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? (எவ்வகைத் தொடர் என கண்டறிந்து எழுதுக)
46. உலக வனவிலங்கு நாள் அக்டோபர் 3 (தமிழெண் கண்டறிந்து எழுதுக)
47. முத்து நன்கு படித்தான் – முத்து வாழ்வில் உயர்ந்தான். (இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக)
48. உடலும் உயிரும் போல (உவமைத் தொடரைப் பயன்படுத்தி தொடர் அமைக்க)
49. ஆடை நெய்வது எதனாலே – அறிவைப் பெறுவது எதனாலே– (இரு வினாக்களுக்கு ஒரு விடை தருக)
50. சிறுமி .............. (தனது / தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள். (பொருத்தமான சொல்லால் நிரப்புக)
51. கோழி ............ (கூவும் / கொக்கரிக்கும்) (சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக)
52. திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது. (உரிய இடங்களில் நிறுத்துக் குறிகளை இட்டு எழுதுக.)

☆ ☆ ☆

## விடைகள்

1. (அ) வைப்பு
2. (ஆ) வட்டெழுத்து
3. (அ) பயிலுதல்
4. (ஈ) இரத்தக்கொதிப்பு
5. (ஈ) கல்வி
6. (இ) நமனை
7. (இ) ஊக்கம்
8. (ஆ) அம்பேத்கர்
9. (இ) இடமொங்கும்
10. (ஈ) விலங்கு + ஒடித்து
11. மட்பாண்டம் – திரிதல் விகாரம்
12. மரவேர் – கெடுதல் விகாரம்
13. மணிமுடி – இயல்புப் புணர்ச்சி
14. கடைத்தெரு – தோன்றல் விகாரம்
15. **தமிழ் புகழ் கொண்டு வாழுமிடம் :** ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து புகழ் கொண்டு வாழ்கிறது.
16. ஓடை கற்களில் உருண்டும், தவழ்ந்தும், நெளிந்தும், சலசல என்ற ஒலி எழுப்பியபடி ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்.
17. **நம்மை நோய் அணுகாமல் காப்பவை :**
    (i) காலையும் மாலையும் நடைப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.
    (ii) தூய்மையான காற்றைச் சுவாசிக்க வேண்டும்.
    (iii) நல்ல குடிநீரைக் குடிக்க வேண்டும்.
    (iv) நன்கு பசித்த பிறகு உண்ண வேண்டும். இவற்றைச் செய்தால் நோய் நம்மை அணுகாது.
18. புல்லாங்குழல், முழவு ஆகியவற்றை தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுகிறார்.